# பரிபூரண ஜீவன்
# PARIPOORANA JEEVAN




## சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின

(அப்போஸ்தலர் 16:5)

**THE THAMIZH PRADHESA ASSEMBLIES OF GOD**

March - April 2026
Volume : 66
ஆண்டு சந்தா ₹120/-
Issue : 2

# REPLICATION GRADUATION - CHENNAI

























## ஆசிரியரிடமிருந்து........!



## சபைகள் வளரட்டும்!

சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு நாளுக்கு நாள் பெருகின (அப்.16: 5).

கிறிஸ்துவுக்குள் அன்பான வாசகர்கள் அனைவருக்கும் இயேசுவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள்!

இந்த கடைசி காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் தேவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவருடைய விருப்பங்களில் பிரதானமானது எல்லா ஜனங்களும் இரட்சிக்கப்படவேண்டும், சபைகள் வளர வேண்டும் என்பதே. அவருடைய இந்த விருப்பத்தைக் குறித்தும் நாம் அதை நிறைவேற்ற என்ன செய்ய வேண்டும் என்றும் பார்ப்போம்!

### சபை வளர்ச்சி குறித்து தேவனின் திட்டம்
### GOD'S PLAN FOR THE CHURCH GROWTH

திருச்சபை வளர்ச்சி தேவனுடைய மீட்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. பலுகி பெருகுங்கள் (ஆதியாகமம் 1:28) என்ற கட்டளையிலிருந்து, என் சபையை நான் கட்டுவேன் (மத்தேயு 16:18) என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் வரை, தேவன் வளர்ச்சியை விரும்புகிறவர் என்பதை வேதாகமம் வெளிப்படுத்துகிறது.

ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே மனுக்குலத்திற்கான தேவனுடைய சித்தமும் விருப்பமுமாயிருக்கிறது என்று நாம் முதலாவதாக உணர்ந்தறிய வேண்டும் (லூக்கா 19:10; யோவான் 3:16; 2பேதுரு3:9; 1தீமோ.2:4). பூமியில் உள்ள சகல தேசங்களும் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குப்பண்ணி, தேவன் ஆபிரகாமை அழைத்தார் (ஆதி.12:1-3). தம்முடைய செய்தியும் இராஜ்யமும் உலக முழுவதும் பரவ வேண்டும் என்ற தம் விருப்பத்தை தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் வெளிப்படுத்தினார் (ஏசாயா 11:9; ஆபகூக் 2:14; தானி.2:35).

தேவ ராஜ்யம் வளரும் என்று இயேசு போதித்தார். கடுகு விதை போலவும் புளித்த மாவு போலவும் தேவ ராஜ்யம் செயல்படும் என்று அவர் ஒப்பிட்டார் (மத்.13:31-33). நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் என்று கூறி தம்முடைய சீஷர்களுக்கு இறுதியான பிரதான கட்டளையை கொடுத்தார் (மத்.28:19; மாற்கு 16:15; லூக்கா 24:47). பிரதான கட்டளை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியின் வல்லமையை சீஷர்களுக்கு வாக்குப்பண்ணினார் (அப்போஸ்தலர் 1:8). ஆகவே, திருச்சபை வளர்ச்சி கிறிஸ்துவால் வாக்குப்பண்ணப்பட்டதும் தேவனால் வழி நடத்தப்படுகிறதும், பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைவேற்றப்படுகிறதுமாகும் (Promised by Christ, directed by God, and powerfully accomplished through the Holy Spirit).

## தேவன் காண்பிக்கும் சபை வளர்ச்சியின் மாதிரி
## GOD'S PATTERN FOR THE CHURCH GROWTH

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் நாம் வாசிக்கும் ஆதித் திருச்சபை, திருச்சபை வளர்ச்சியின் தெளிவான மாதிரியாக விளங்குகிறது. பெந்தெகொஸ்தே நாளில் பெற்ற பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பயந்திருந்த சீஷர்களை தைரியமான சாட்சிகளாக மாற்றியது (அப்.2:1-4). சிலுவையில் அறையப்பட்டும் உயிர்த்தெழுந்தும் உள்ள கிறிஸ்துவைப் பற்றிய பேதுருவின் பிரசங்கத்தின் மூலம், 3000 பேர் ஒரே நாளில் திருச்சபையில் சேர்க்கப்பட்டனர் (அப்.2:41). அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 2:42). உபத்திரவங்கள் எழுந்தபோதிலும், தேவனுடைய வார்த்தை வளர்ந்து பெருகியது (அப்போஸ்தலர் 6:7; 12:24). இதனால், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், வேதவசனப் பிரசங்கம், உண்மையான ஐக்கியம், நிலைத்த விசுவாசம் மற்றும் ஆத்தும ஆதாயம் (Spirit-baptism, Scriptural preaching, sincere fellowship, steadfast endurance and soul winning are essential marks of sustained church growth) ஆகியவை திருச்சபை வளர்ச்சியின் அடையாளங்களாக இருப்பதை ஆரம்பத் திருச்சபை கற்றுக்கொடுக்கிறது.

மேலும் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் 'வளர்ச்சி அறிக்கைகளை' (Growth Reports) லூக்கா தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதியதை நாம் வாசிக்கும்போது சபை வளர்ச்சியின் மீது தேவனுடைய ஆர்வம் தெளிவாக காணப்படுகின்றது.

பெந்தெகொஸ்தே நாளன்று ஏறக்குறைய 3000 பேர் கிறிஸ்தவர்களானார்கள் (அப்.2:41). தினந்தோறும் ஜனங்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (2:47). பின்பு விரைவிலேயே சபையில் 5000 பேர் இருந்தார்கள் (4:4). அதன் பிறகு திரளான கூட்டத்தாராகிய ஆண்களும் பெண்களும் சபைக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் (5:14), மற்றும் சீஷர்களின் எண்ணிக்கை தொடர்ந்து வளர்ந்தது (6:1,7;9:31; 16:5).

பல இடங்களில் அநேகர் (9:42; 14:21; 18:8), 'அநேக ஜனங்கள்' (11:21,24), திரளான ஜனங்கள் (14:1; 17:4), 'அநேகம் பேர்' (17:12) கிறிஸ்தவர்களானார்கள் என்று எழுதப்பட்டுள்ளது. இதன் விளைவாக, 'தேவ வசனம் வளர்ந்து பெருகிற்று' (அப்.12:24), 'விருத்தியடைந்தது (6:7), கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று (13:49) மற்றும் 'இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது (19:20) என்று வாசிக்கிறோம்!.

சபை எண்ணிக்கையிலும் ஆவிக்குரியத் தரத்திலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் (எபே.4:11-16). எண்ணிக்கைக்காக நாம் சத்தியத்தைத் தியாகம் செய்வதை அவர் விரும்புகிறதில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன் (யோவான் 17:17).

## சபை வளர்ச்சியில் விசுவாசிகளின் பங்கு
## GOD'S PEOPLE IN THE CHURCH GROWTH

திருச்சபை வளரவும் தேவ ராஜ்யம் விரைவில் கட்டப்படவும் ஒவ்வொரு விசுவாசியும் தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். கீழ்க்கண்ட ஏழு காரியங்களை ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் தன்னுடைய ஸ்தல சபையிலும், ஸ்தல சபைக்காகவும் செய்யும்போது அந்த சபை ஆசீர்வதிக்கப்படும் மற்றும் ஆசீர்வாதமாக மாறும்!

### 1. ஜெபத்தில் உறுதியாயிருங்கள்

ஒரு ஸ்தல சபையின் ஆசீர்வாதத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் ஒரு விசுவாசி செய்யும் மிகப்பெரிய காரியம் ஜெபமாகும். ஆதி திருச்சபை விசுவாசிகள் ஜெபத்திலே

உறுதியாய் தரித்திருந்தார்கள் (அப்.2:41; 4:24-31; 12:5; ரோமர் 12:12). ஜெபத்தின் விளைவாக சபை வளர்ந்து கொண்டே இருந்தது. ஒரு ஸ்தல சபையின் வெற்றி அந்த சபை விசுவாசிகளின் ஜெபத்தில் தான் இருக்கிறது (யாத்.17:8-13). உங்கள் சபை போதகருக்காக தினமும் ஜெபியுங்கள். தேவன் அவரை ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்தவும், சபையை தேவ சித்தத்தின்படி நடத்த நல்ல சுகம், ஞானம், அபிஷேகம், கிருபைகளை தேவன் தரும்படியாகவும் ஜெபியுங்கள். சபை மூப்பர்கள், தலைவர்கள், விசுவாசிகள் அனைவருக்காகவும் ஜெபியுங்கள். சபையின் எழுப்புதலுக்காகவும், வளர்ச்சிக்காகவும் தினமும் ஜெபியுங்கள் (1 தீமோ.2:1; எபேசியர் 6:18)

**2. சபை கூடி வருதலை விட்டுவிடாதிருங்கள்**

சபை கூடிவருதலை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள் (எபிரெயர் 10:25). வாரத்தின் முதல் நாளை தேவனுக்கு கொடுத்து, தேவ ஜனங்களோடு ஜெபிப்பதற்கும், ஆராதிப்பதற்கும், வசனத்தை கேட்பதற்கும் முக்கியத்துவம் கொடுங்கள். ஒவ்வொரு ஞாயிறும் விசுவாசத்தோடும் எதிர்பார்ப்போடும் ஆராதனைகளில் குடும்பமாக பங்குபெறுங்கள். தேவன் உங்களோடு பேசும்படி ஜெபத்தோடு செல்லுங்கள். போதகர் பேசும் செய்திகளை குறிப்பெடுக்க நோட்டு, பேனா கொண்டுசெல்லுங்கள். தேவன் உங்களோடு பேசிய காரியத்திற்கு உடனடியாக கீழ்ப்படிய ஒப்புக்கொடுங்கள். சரியான நேரத்திற்கு ஆலயத்திற்குச் செல்ல பிரயாசப்படுங்கள். என்னை கனம்பண்ணு கிறவர்களை நான் கனம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார் (1சாமு.2:30)

**3. அன்பு காட்டுங்கள்**

சபையில் எல்லாரிடமும் அன்பாயிருங்கள் (யோவான் 13:34). மற்றவர்கள் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (மத்தேயு 7:12). வார்த்தையினாலும் கிரியையினாலும் அன்பு கூருங்கள். விசுவாசிகளை உற்சாகப்படுத்துங்கள், மன்னியுங்கள், உங்களால் இயன்ற மட்டும் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்யுங்கள். மனத்தாழ்மையினாலே மற்றவர்களை உங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணுங்கள் (பிலி.2:3). ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று புதிய ஏற்பாட்டில் 16 முறை கூறப்பட்டுள்ளது. சபைக்கு புதிதாக வருகிறவர்கள் விசுவாசிகளிடத்தில் தேவ அன்பை கிரியையில் காண விரும்புகிறார்கள்!.

**4. ஒற்றுமையை காத்துக்கொள்ளுங்கள்**

சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக் கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் என்று வேதம் கூறுகிறது (எபேசியர் 4:3). ஒற்றுமை தேவனுடைய ஆசீர்வாதங்களை சபைக்குள் கொண்டு வருகிறது. ஆனால் பிரிவினை, சண்டை, பொறாமை, வாக்குவாதம் இவைகள் திருச்சபையை அழிக்க சாத்தான் உபயோகிக்கும் கருவிகள். ஆகவே சகலவித புறங்கூறுதல்கள், கோபங்கள், கசப்புகள் ஆகியவைகளை ஒழித்துவிடுங்கள் (எபே.4:31). தேவன் நமக்கு ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை தந்திருக்கிறார் (2கொரி.5:18). யாவரோடும் சமாதானமாயிருங்கள் (ரோமர் 12:18). சமாதானத்துக்கு அடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கதக்கவைகளையும் எப்பொழுதும் நாடுங்கள் (ரோமர் 14:19). சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் என்று இயேசு கூறுகிறார் (மத்தேயு 5:9).

**5. வரங்களைப் பயன்படுத்துங்கள்**

தேவன் இரட்சிக்கப்பட்ட, அபிஷேகம் பெற்ற ஒவ்வொரு விசுவாசிக்கும் வரங்களை தந்திருக்கிறார். உங்கள் வரங்களை கண்டுபிடித்து சபையின் பிரயோஜனத்திற்காக பயன்படுத்துங்கள். பார்வையாளராக இராமல் பங்குள்ளவர்களாக இருங்கள் (1கொரி.12:8-10; 1பேதுரு 4:10; ரோமர் 12:6-8). உங்கள்

தாலந்துகளைப் புதைத்து வைக்காதீர்கள் (மத்.25:18). தேவன் உங்களுக்கு கொடுத்த வரத்தை அனல்மூட்டி எழுப்பி விடுங்கள் (2தீமோ.1:6). உங்களால் இயன்ற மட்டும் போதகரோடு சேர்ந்து ஊழியம் செய்து, சபை தரிசனத்தை நிறைவேற்றுங்கள். பராமரிப்புக் குழு, ஜெபக்குழுக்களில் இணைந்து செயல்படுங்கள். சபையில் நடைபெறும் பயிற்சி வகுப்புகள், வேதப்பாடங்களில் பங்கு பெற்று உங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்.

### 6. பணத்தை முதலீடு செய்யுங்கள்

நீங்கள் பங்குபெறும் மற்றும் உங்கள் ஆத்துமாவை போஷிக்கும், உங்களை பராமரிக்கும் ஸ்தல சபையில் உங்கள் தசமபாகம் மற்றும் காணிக்கைகளை கொடுத்து கர்த்தரை கனம் பண்ணுங்கள் (மல்கியா 3:8-12; நீதி.3:9,10). ஊழியத்தின் தேவைகளுக்கு உற்சாகமாக கொடுங்கள் (2கொரி.9:7). பவுலைப் போல ஆத்துமாக்களுக்காக செலவுபண்ணவும், செலவுபண்ணப்படவும் ஆயத்தமாயிருங்கள் (2 கொரி.12:15). இயேசு, 'நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக்கொள்வாருண்டாகும்படி, அநீதியான உலகப்பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள்' என்று கூறினார் (லூக்கா 16:9).

### 7.ஆத்தும ஆதாயம் பண்ணுங்கள்

ஆதித் திருச்சபையில் ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியும் நற்செய்தி அறிவிக்கும் பணியில் தாங்களாகவே ஈடுபட்டார்கள். அப்போஸ்தலர்கள் மட்டுமல்லாமல் ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை பிரசிங்கத்தனர் (அப்.8:1,4). மத்தேயு 28:18-20 வசனங்களில் இயேசு கொடுத்த பிரதான கட்டளை எல்லா விசுவாசிகளுக்கும் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு செயல்பட்டனர். கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படேன் என்றும், சுவிசேஷத்தை பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்றும் பவுல் கூறுகிறார் (ரோமர் 1:16; 1 கொரி.9:16). இப்படிப்பட்ட வாஞ்சையையும் வைராக்கியத்தையும் தேவன் நமக்கும் தருவாராக!

இயேசுவண்டை ஆத்துமாக்களை கொண்டு வருவதற்கு ஜெபித்து திட்டமிடுங்கள். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படியாக நான் எல்லாருக்கும் எல்லாமானேன் என்று பவுல் கூறுகிறார் (1கொரி. 9:22). இரட்சிக்கப்படாத உங்கள் உற்றார், உறவினர்கள் நண்பர்களின் பெயர்களை எழுதி அவர்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். அருகிலுள்ள பகுதிக்கு ஜெபம் நடை செல்லுங்கள். நல்ல சுவிசேஷ கைப்பிரதிகளை கொடுங்கள். எப்பொழுதும் புன்முறுவலோடு மக்களிடம் பழகுங்கள். உங்களுடைய சாட்சியை பகிர்ந்து கொள்ளுங்கள். வாய்ப்பிருந்தால் அருகிலுள்ள சிறுவர்களை உங்கள் வீட்டிற்கு அழைத்து பாடல்களையும், வேதாகம கதைகளையும் கற்றுக் கொடுங்கள். நண்பர்களை சபைக்கும் நற்செய்தி கூட்டங்களுக்கும் அழைத்துச் செல்லுங்கள். வியாதியஸ்தர்களை சந்தித்து அவர்களுக்காக ஜெபியுங்கள். எவ்விடத்திலும் எவருக்கும் உதவி செய்ய ஆயத்தமாயிருங்கள். வருடத்தில் இரண்டு பேரையாவது இலக்கு வைத்து, இரட்சிப்பிற்குள் நடத்தி ஞானஸ்நானம் பெற செய்து, சீஷராக்க தீர்மானியுங்கள்!

மேற்கூறிய காரியங்களை நீங்கள் செய்ய தீர்மானிக்கும்போது திருச்சபையின் தூண்களாக நீங்கள் மாற முடியும். மேலும் இவற்றை செய்யும்போது திருச்சபை வேகமாக வளரும், மகிழ்ச்சியும் வல்லமையும் சபையில் காணப்படும், தேவ ராஜ்யம் கட்டப்படும்! கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி மத்திய மண்டலம்.



# ஒப்புரவாகுதல் - Reconciliation


## Rev. J. ஸ்டேன்லி மாணிக்கராஜ்

Senior Pastor, Assembly of God Church, Vellore
Secretary - The Thamizh Pradhesa Assemblies of God


கிறிஸ்துவுக்குள் அன்பான பரிபூரண ஜீவன் பத்திரிக்கை வாசகர்களுக்கு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இந்தக் குடும்ப பகுதியில் ஒப்புரவாகுதலைக் குறித்த சில காரியங்களை சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

வேதாகமம் சகலவிதமான கசப்பையும், கோபத்தையும், மூர்க்கத்தையும், மற்ற எந்தத் துர்க்குணத்தையும் நம்மைவிட்டு நீக்கும்படி அறிவுறுத்துகிறது (எபே.4:31). அநேக நேரங்களில் குடும்ப உறவுகளில் கசப்பை நம் இருதயங்களிலே வைத்திருக்கும்பொழுது, அது ஆரோக்கியமான உறவைகெடுத்து, சத்துருவுக்கு இடமுண்டாக்கி, வீண் பிரச்சனைகளை வீடுகளில் ஏற்படுத்துகிறதை பார்க்கிறோம். ஆகவே, ஒப்புரவாகுதலை முதலாவது நம்முடைய வீட்டிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். கணவன் மனைவிக்கு இடையே, பெற்றோர், பிள்ளைகளுக்கிடையே, வருத்தங்களையும் கசப்புகளையும் சுமந்து கொண்டிருப்போமானால், ஒப்புரவாக கர்த்தர் உங்களுக்கு உதவிசெய்வாராக. ஒப்புரவாகுதலுக்கான சில எளிய படிகளை உங்கள் முன்பு வைக்கிறேன்.

### 1. ஒப்புரவாகுதலுக்காக விசேஷமாக ஜெபியுங்கள்:
### (Take time to pray specially for Reconciliation)

எபே.4:26-ல், "சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது என்று எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறோம். ஒருவேளை வாக்குவாதங்களோ, வருத்தங்களோ, கசப்புகளோ, இருதயத்திலிருக்குமானால், ஆண்டவரிடத்தில் ஊக்கமாக இரவு படுக்கைக்கு செல்வதற்குமுன் மாற்றும்படியாக ஜெபிக்கும்பொழுது, நிச்சயமாகவே கர்த்தர் ஒப்புரவாகுதலுக்கான சூழ்நிலைகளையும், திறந்த மனதையும் குடும்பத்துக்குள்ளே கட்டளையிடுவார். ஆகவே, ஒப்புரவாகுதலுக்காக நேரமெடுத்து தீவிரமாக ஜெபியுங்கள். ஜெபமின்னையே, அநேக நேரங்களில் ஒப்புரவாக வேண்டிய தருணங்களை நாம் உணராமல் செய்துவிடுகிறது.

### 2. ஆவியானவர் ஊழியம் செய்யவிட்டுக்கொடுங்கள்:
### (Allow the Holy Spirit to minister to you)

எபே.4:27-ல், பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய வாழ்க்கையில், சிந்தனைகளில், மனநிலையில் பிசாசு எப்பொழுதுமே குறுக்கிட்டு, தேவபிரசன்னத்தைவிட்டு திசைத்திருப்பி, நம்மை சிக்கல்களில் சிக்கவைக்கிறதை பார்க்கிறோம். பிசாசுக்கு இடங்கொடாமலிருக்க வேண்டுமென்றால், முதலாவது நம்முடைய இருதயத்தில் ஆவியானவருக்கு இடமிருக்கவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. அவர் எந்த உறவையும் சரிசெய்வதற்கு போதுமானவர். அவருடைய பிரசன்னம் மற்றும் தேவவார்த்தையின் மூலமான அவருடைய கிரியை முழுமையாக நடப்பதற்கு நம்மை கொஞ்சம் விட்டுக்கொடுப்போமென்றால், நம்முடைய குடும்பங்களிலே மிகப்பெரிய பலனை பார்க்க உதவிசெய்வார். ஆவியானவருக்கு இடம் இல்லாத இருதயங்களில், நிச்சயமாக பிசாசு இடம்பிடிக்க தீவிர முயற்சி செய்வான் என்பதை மறந்து விடக்கூடாது.

### 3. உங்களுடைய தவறுகளை உணருங்கள்: (Realize your mistakes)

மத்.7:3-ல், நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன என்று எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறோம். இங்கே உன்னுடைய சகோதரன் என்ற இடத்தில் உங்களுடைய கணவன், மனைவி, பெற்றோர்கள், பிள்ளைகள் என்று போட்டுக்கொள்ளுங்கள். அநேக நேரங்களில் நாம் பிரச்சனைகளில் நம்முடைய பங்கை உணராமல், மற்றவர்களை குறைசொல்லுவதில் தீவிரமாக இருக்கிறோம். ஒரு குடும்ப பிரச்சனையில், ஒருவர் மட்டுமே பிரச்சனைக்குக் காரணமாக இருக்க முடியாது. ஏதோ ஒருவகையில், இருவருமே பிரச்சனைக்குக் காரணம் என்பதை நாம் உணரவேண்டும். ஆகவே, மற்றவருடைய தவறுகளை உணர்த்திக் காட்டுவதற்கு முன்பு, நம்முடைய தவறுகளை உணர ஆரம்பித்து சரிசெய்தால், கர்த்தர் நிச்சயமாக ஒப்புரவாகுதலை நமக்குக் கட்டளையிடுவார். மாறுவதற்கான ஆழமான விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டியது நம்முடைய கடமை என்பதை நாம் மறந்து போகக்கூடாது.

### 4. ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்: (Forgive each other)

எபே.4:32-ல், நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மன்னிப்பை அனுபவிக்கும் ஒரு கிறிஸ்தவன், பிறரை மன்னிக்காமல் இருக்க முடியாது. நம்முடைய சொந்த மனைவியையோ, கணவனையோ, பிள்ளைகளையோ, பெற்றோர்களையோ மன்னிக்க முடியாத கிறிஸ்தவர்களுடைய இரட்சிப்பு கேள்விக்குறியாக இருக்கிறது.

மன்னிப்பதற்கு முதலாவதாக, நாம் பழைய சம்பவங்களை மறக்கவேண்டும். இரண்டாவதாக, மற்றவர்களுடைய இடத்தில் இருந்து பிரச்சனையை பார்க்கவேண்டும். உதாரணமாக, கணவன் மனைவியினிடத்திலிருந்து பிரச்சனையை பார்ப்பதும், மனைவி கணவனிடத்திலிருந்து பிரச்சனையை பார்ப்பதும் எளிமையான தீர்வை கொண்டுவரும். மூன்றாவதாக, வாய் திறந்து ஆண்டவரிடத்தில் மன்னிப்பை கேட்பதுபோல, ஒருவருக்கொருவர் கேட்கவேண்டும்.

### 5. குடும்ப உறவுகளை மேன்மையாக எண்ணுதல்: (Value the family relationship)

அநேகர் செய்த தவறுகளையே திரும்ப திரும்ப வீட்டில் செய்வதும், பிரச்சனைகள் வரும்பொழுது அதை தீர்ப்பதற்காக ஜெபமோ மற்றும் எந்த நடவடிக்கையோ எடுக்காமலிருப்பதும் எவ்வளவு பெரிய ஆபத்து என்பதை உணராதிருக்கிறார்கள். மற்ற உறவுகளை சரிசெய்ய விரும்புகிற அநேகர் குடும்ப உறவுகளை கவனிக்காமல் விட்டுவிடுகிறதை பார்க்கிறோம். காரணம் என்னவென்றால், குடும்ப உறவின் மேன்மைகளை அநேகர் அறியவில்லை.

மனிதனுக்கிருக்கிற உறவுகளில் மிகவும் பிரதானமான, தேவையான, முக்கியமான உறவு குடும்ப உறவு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதை சரிசெய்ய தீவிரமாக ஜெபிக்க வேண்டும், முடிந்த முயற்சிகளை எடுக்கவேண்டும். மற்றவற்றை கர்த்தர் பார்த்துக்கொள்வார்.

இந்த நாட்களில் கசப்புகளோடு, சந்தேகங்களோடு, பிரிவினை எண்ணங்களோடு, இருதய பாரங்களோடு யாராவது இப்பகுதியை வாசித்தால், கர்த்தர் உங்களுக்காகவே இதை எழுதவைத்திருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். கொஞ்சமும் பிரிவினைகளுக்கு இடங்கொடுக்காதபடிக்கு உடனடியாக ஒப்புரவாகுதலுக்காக தீவிர முயற்சி செய்யுங்கள். நம்முடைய முயற்சியையும், மனநிலையையும் பார்க்கிற ஆண்டவர் நம்முடைய குடும்ப உறவுகள் எவ்வளவு மோசமாக பாதிப்படைந்திருந்தாலும், அதை சரிசெய்து, செவ்வையாக்குவதற்கு உண்மையுள்ளவராக போதுமானவராக இருக்கிறார்.

**ஒப்புரவாகுவோம், தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரிப்போம்!**



# தேவன் நமக்கு வைத்திருக்கும் நல்ல திட்டங்கள்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்! தேவன் நமக்கு வைத்திருக்கும் நன்மையான, சமாதானத்துக்கேதுவான திட்டங்களைக் குறித்து இவ்விதழில் பார்ப்போம். 'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் வைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே' (எரேமியா 29:11) ( "I know the plans I have for you" declares the Lord, "Plans for welfare and not for evil, to give you a future and a hope) என்பதே கர்த்தர் இவ்வருடத்தில் நமக்கு தந்தருளும் வாக்குத்தத்தம் ஆகும். நினைவுகள் என்பது திட்டங்கள் அல்லது நம் வாழ்வைக் குறித்த கர்த்தரின் நோக்கமாகும். கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்; அவர் ஆசீர்வதிப்பார்(சங்கீதம் 115:12). நம் தேவன் நமக்களித்திருக்கும் வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவரும், உண்மையுள்ளவருமாய் இருக்கிறார். அவர் நாமம் அதிசயமானவர். வாக்குத்தத்தங்கள் நிறைவேற நாம் விசுவாசிக்க வேண்டும், ஜெபிக்க வேண்டும், ஸ்தோத்தரிக்க வேண்டும். வாக்குத்தத்தத்திற்கு எதிராக சூழ்நிலைகள் இருந்தாலும் விசுவாசத்துடன் தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டும். வனாந்திரமான சூழ்நிலையிலும் தேவன் நம்மைக் காண்கிறவராயிருக்கிறார் (ஆதி.16:13). தீங்கு நாளில் நம்மை மறைத்து, ஒளித்து வைத்து உயர்த்துவார் (சங்கீதம் 27:5). நம் தேவன் நம் நடுவில் இருக்கிறார். நம் பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; நம் பேரில் கெம்பீரமாய் களிகூருவார் செப்.3:17). சில பெண்களின் வாழ்வில் தேவன் வைத்திருந்த நல்ல, உயர்ந்த, மேன்மையான நோக்கங்களைக் குறித்து நாம் இங்கு பார்ப்போம்.

## ஏவாள்

தேவன், ஆதாமையும், ஏவாளையும் தம்முடைய சாயலாக சிருஷ்டித்து, சகல அதிகாரத்தையும் கொடுத்து , கனி நிறைந்த அழகான ஏதேன் தோட்டத்தில் வைத்தார். தோட்டத்தின் நடுவில் இருக்கும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம் என்று ஒரே ஒரு கட்டளையைக் கொடுத்திருந்தார். ஆனால், சர்ப்பம் ஏவாளை வஞ்சிக்க நினைத்து, அவளிடம் கேட்ட போது, அவள், புசிக்கவும் தொடவும் வேண்டாம் என்று தேவன் கூறியதாக சொல்லுகிறாள் (ஆதி.3:3). தேவனுடைய கட்டளைகள், நியமங்கள் என்னவென்று சரியாய் அறிந்து கொள்ள நாம் வேதத்தை நன்கு தியானித்து வாசிக்க வேண்டும். தொடுகுறி சாஸ்திரம் போல், அவசரமாக திறந்து, எந்த பகுதி அல்லது வசனம் வருகிறதோ அதை வாசித்து விட்டுப் போகக்கூடாது. நிதானித்து, குழப்பமற்ற, தெளிவான மனதோடு வாசிக்க வேண்டும். பின்னர் தியானிக்க வேண்டும். கர்த்தர் நமக்குத் தரும் வாக்குத்தத்த வசனங்களை மனனம் செய்ய வேண்டும். ஆண்டவருடைய வார்த்தையை நாம் சரியாக அறியாவிட்டால், சாத்தான் நம்மை எளிதில் ஏமாற்றி விடுவான். தேவ கட்டளைக்கு கீழ்ப்படியாமல் போனதன் நிமித்தம், ஏவாள், தேவமகிமையை இழந்து

சாபத்தைப் பெற்றுக் கொண்டாலும், இரக்கமுள்ள தேவன், ஸ்திரீயின் வித்தாக வந்து, மனுக்குலத்திற்கு மீட்பளிக்கும் பெரிய திட்டத்தை, ஏதேனில் வாக்குப் பண்ணுகிறார். ஒருவேளை தேவன் நமக்கு வைத்திருக்கும் திட்டத்தை நாம் குழப்பிப் போட்டிருந்தாலும், தேவன் தம்முடைய கிருபையின் ஐசுவரியத்தின்படி, பாவமன்னிப்பாகிய மீட்பை நமக்குத் தந்து, திரும்பவும் நம்மைப் பயன்படுத்த அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார்.

## எஸ்தர்

தாய் தகப்பனற்று அநாதையைப் போன்றிருந்த அத்சாள் என்னும் எஸ்தரைக் குறித்த பெரிய நோக்கத்தை தேவன் வைத்திருந்தார். அவளுடைய சகோதரன் முறையான மொர்தெகாய் அவளைத் தன் மகளாக எடுத்து வளர்த்து வந்தார். தாயும் தகப்பனும் இல்லாதிருந்தும், அவளை மகளாக ஏற்றுக் கொள்ள தேவன் மொர்தெகாயை நியமித்திருந்தார். தேவன் தமது அநாதி தீர்மானத்தின்படி அவளை பெர்சிய தேசத்தின் ராஜாத்தியாக்குகிறார். ஆனால், முழு இஸ்ரவேலர்களையும் அழிக்கும்படி ஆமான் என்பவன் எழும்புகிறான். தேவனின் திட்டம் நிலைத்திராதது போன்ற ஒரு சூழ்நிலை. மொர்தெகாயின் அறிவுரைப்படி எஸ்தர் தன் தாதிமார்களோடு 3 நாட்கள் உபவாசித்து ஜெபிக்கின்றாள் . தேவன், அழகான திட்டத்தை எஸ்தருக்குக் கொடுக்கின்றார். அவள் அதன்படி செயல்படுகின்றாள். அவளையும் சேர்த்து முழு இஸ்ரவேலர்களும் காப்பாற்றப் படுகிறார்கள். மொர்தெகாயை தூக்கிலிட ஆமான் செய்த தூக்கு மரத்தில், ஆமானையே தூக்கிப் போடுகிறார்கள். அவனின் வீடு எஸ்தர் ராஜாத்திக்குக் கொடுக்கப்படுகிறது. காரியம் மாறுதலாய் முடிந்தது. சேர்ந்து ஜெபிக்கும் ஜெபம் (group prayer and corporate prayer) எத்தனை வல்லமையுள்ளதாயிருக்கின்றது!.நாமும் தனி ஜெபம் செய்கிறவர்களாயிருப்பதோடு குடும்ப ஜெபம் மற்றும் சபையில் நடத்தப்படும் ஜெபங்கள் மற்றும் நண்பர்களோடு ஜெபிக்கும் ஜெபங்களையும் விட்டுவிடக்கூடாது. குழு ஜெபங்களை அலட்சியம் செய்யக்கூடாது. ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்தக் கூடுமானால், இருவர் பதினாயிரம் பேரைத் துரத்த முடியும். ஆகவே கூடி ஜெபிக்கும் பழக்கமுடையவர்களாயிருங்கள். உங்களையும், உங்கள் குடும்பத்தையும் மாத்திரமல்ல, முழு தேசத்தையும் ஆதாயமாக்கி கொள்ள முடியும்.

## ரூத்

நகோமி, தன் இரண்டு மருமக்களையும் அவர்கள் தாய் வீட்டிற்கு திரும்பிப் போய் விடும்படி கூறுகிறாள். ஆனால், ரூத்தோ, மிக தீர்க்கமாக அதைக் குறித்துப் பேசவேண்டாம் என்கிறாள். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன். உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்கிறாள். ரூத்தின் மன உறுதியைக் கண்ட, நகோமி அவளை அழைத்துக் கொண்டு போகின்றாள். இப்படி நகோமியின் தேவனைத் தன்னுடைய தெய்வமாக ஏற்றுக்கொண்டு, தன் மாமியாரை நம்பி அவளுடன் போகத் தீர்மானிக்கிறாள் ரூத். எத்தனை நற்குணம் உடையவளாக இருக்கின்றாள்! அங்கு போன பின்பும், தனக்கும் தன் மாமியாருக்கும் ஆகாரம் உண்டாயிருக்கும்படி கதிர் பொறுக்கப் போகின்றாள். அவள் சோம்பலுடையவளாக இராமல், சுறுசுறுப்புள்ளவளாக வேலை செய்கிறாள். புத்திசாலியான அவளை தேவன் போவாசுடைய நிலத்திற்கு வழி நடத்துகிறார். அவளுக்கு அது தற்செயலாய் நேரிட்டதைப் போன்றிருந்தாலும், தேவனுடைய திட்டத்தில் தற்செயல் என்று ஒன்றில்லை. அனைத்தும் தேவசெயலே (Nothing is accidental in His Plan). போவாஸ் அவளைத் திருமணம் செய்து கொள்கிறார். இவர்களுக்குப் பிறந்த ஓபேத் தான், தாவீதின் தந்தையான ஈசாயைப் பெற்றான். இந்த தாவீதின் வம்சத்தில் தான்

இயேசுவானவரும் பிறந்தார். தேவனைப் பின்பற்றுவதில் மன உறுதியாக இருந்த ரூத், தேவனுடைய மீட்பின் திட்டத்தில் பங்கு பெற்றாள். உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர் (ஏசாயா 26:3). பூரண சமாதானம், உலகில் சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் தேவனுடைய மிகப் பெரிய உன்னத திட்டத்தில் பங்கு ஆகியவைகள் நாம் தேவனை உறுதியாகப் பற்றிக் கொள்ளும்போது, ஈவாக நமக்குக் கிடைக்கின்றன.

## லேயாள்

லேயாளுடைய கண்கள் கூச்சப் பார்வையாயிருந்தது. யாக்கோபு கூட, அவளுடைய தங்கையான ராகேலை தான் விரும்பினான். லேயாள் அற்பமாய் எண்ணப்பட்டாள் என்று கர்த்தர் கண்டார் (ஆதி.29:31-35). நான் அற்பமாய் எண்ணப்படுகிறேன், நடத்தப்படுகிறேன் என்று அங்கலாய்க்கிறீர்களோ? தேவன் உங்களைக் காண்கிறார். உங்கள் சூழ்நிலை எதுவானாலும், யாரும் உங்களை விசாரிக்கவில்லை, உதவி செய்யவில்லை அல்லது உங்களுக்காகப் பேசவில்லை என்று நீங்கள் கலங்கிக் கொண்டிருந்தாலும் உங்களைக் காண்கிறவர் ஒருவர் இருக்கிறார். ஆகாரைக் கண்டவர் உங்களையும் காண்கிறார். லேயாளைக் கண்ட தேவன் பிள்ளைகளைக் கொடுத்து, அவளை ஆசீர்வதித்தார். அவளின் மகனான லேவியின் சந்ததியினர் ஆசாரிய ஊழியம் செய்தனர். யூதாவின் சந்ததியில், மனுக்குல இரட்சகர் இயேசு பிறந்தார். தேவன் அவளின் அற்பமான சூழ்நிலையிலிருந்து மகா மேன்மையான ஒரு சூழலை அவளுக்கு உண்டாக்கினதுபோல, அற்பமாய் எண்ணப்படுகிற உங்களின் சூழ்நிலையையும் மேன்மையுள்ளதாக மாற்றுவார். அற்பமாய் எண்ணப்பட்ட லேயாள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச அட்டவணையில் இடம் பெற்றாள். மனந்தளராதிருங்கள். தேவன் உங்களுக்கென்று ஒரு நல்ல திட்டத்தை வைத்திருக்கிறார்.

இந்த சகோதரிகளுக்கு தேவன் மேன்மையான திட்டங்களை வைத்திருந்தது போல, உங்கள் ஒவ்வொருவரைக் குறித்தும் தேவன் மேன்மையான திட்டங்களை வைத்திருக்கிறார். இப்புது வருடத்தில் நல்ல தீர்மானங்களை எடுங்கள்.தேவன் உங்களுக்கென்று நியமித்த கிரியைகளை அறிந்து கொள்ள வாஞ்சியுங்கள். ஒழுங்காக வேதத்தை வாசித்து, தியானிக்கவும், தனி ஜெபம், குடும்ப ஜெபம், ஜெபக் கூடுகைகளை விட்டுவிடாமல் இருக்கவும், சுவிஷேத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதினிமித்தம், ஆண்டவருடைய பிரதானக் கட்டளையை நிறைவேற்றவும் தீர்மானம் எடுங்கள். உங்களைக் குறித்த நன்மையான திட்டங்களை தேவன் நிறைவேற்றுவார். அழைத்தவர் உண்மையுள்ளவர். அவர் அப்படியே செய்து முடிப்பார்!

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்தரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY-620 001
Cell : 94434 15484



# யோனா : JONAH

## யோனாவின் புத்தகம்:


Rev. Dr. சாமுவேல் ராஜ் R.

All India National Director, Global University,

Asst.Superintendent, The Thamizh Pradhesa Assemblies of God


ஓசியா முதல் மல்கியா வரையுள்ள தீர்க்கதரிசிகள் (Minor Prophets) பன்னிரண்டு பேர் ஆவர். அவர்களில் யோனா புத்தகம் ஐந்தாவது புத்தகமாகும். பிற தீர்க்கதரிசன புத்தகங்களிலிருந்து யோனா சற்று வித்தியாசமானது. தரிசனங்களையும் கர்த்தர் தந்த வார்த்தைகளை மட்டுமே அறிவிக்காமல் யோனா தீர்க்கதரிசியின் வாழ்க்கையில் குறிப்பிட்ட காலத்தில் நடந்த சம்பவங்களைச் சொல்லும் புத்தகமாக இப்புத்தகம் அமைந்துள்ளது.

இப்புத்தகத்தை சிலர் “கட்டுக்கதை” (fictional) என்றும், சிலர் “ஞான அர்த்தமுடைய கதை” (allegory) என்றும், வேறு பலர் “உண்மை சரித்திரம்” (factual) என்றும் நம்புகின்றனர்.

மத்தேயு 12:41-42 மற்றும் லூக்கா 11:32 ஆகிய வசனங்களில் நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து யோனாவை ஒரு சரித்திரப் புருஷன் என்று குறிப்பிடுகிறார். எனவே நாமும் இப்புத்தகத்தை சரித்திரப் புத்தகம் என்று நம்புகிறோம். மேலும் 2இரா. 14:24 யோனா ஒரு சரித்திர புருஷன் என்பதற்கு ஆதாரமாயுள்ளது.

### யோனா புத்தகத்தின் கருப்பொருள்:

கர்த்தர் சர்வ ஆளுகையுடையவர்; அவருடைய அன்பு, கருணை, இரக்கம் பெரியது. எவ்வித கொடிய ஜனத்துக்கும் அவர் கருணை காட்டுவார். அவர்களை மன்னித்து இரட்சிக்க விருப்பமுள்ளவராயிருக்கிறார். இதுவே யோனா புத்தகம் நமக்குத் தரும் கருப்பொருள்.

### யோனா என்ற தீர்க்கதரிசி:

‘யோனா’ என்பதற்கு ‘புறா’ என்பது பொருள். வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் தேசத்தில் ‘காத்தேபேர்’ என்னும் சிற்றூரில் பிறந்தான், (2 இரா.14:25). இது கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து ஐந்து கி.மீ. தொலைவிலுள்ள சிற்றூர் ஆகும். இவன் காலத்தில் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேலில், இரண்டாம் யெரொபெயாம் (கிமு793-753) ஆண்டு வந்தான். தெற்கு ராஜ்யமாகிய யூதாவில் உசியா ஆட்சி செய்தான்.

### யோனாவின் சிறப்பு அழைப்பும், கீழ்ப்படியாமையும்:

யோனா, இஸ்ரவேலில் சுமார் 50 ஆண்டுகளாக தீர்க்கதரிசன ஊழியத்தைச் செய்து வந்தான். அந்நாட்களில் அசீரியா உலக வல்லரசாக இருந்தது. அங்கு ஆதாத் - நிராரி III (கிமு.810-783) மற்றும் அசூர்தான் III (கிமு.785-735) ஆகிய மன்னர்கள் யோனாவின் காலத்தில் ஆட்சி செய்தனர். நினிவே அசீரியாவின் தலைநகராயிருந்தது. அங்குள்ள மக்கள் துன்மார்க்கராயும், துஷ்டராயும், கொடியவர்களாகவும் இருந்தனர். அவர்கள்மேல் நியாயத்தீர்ப்பை அனுப்பி அவர்களைத் தண்டிக்க கர்த்தர் சித்தங்கொண்டார். இச்செய்தியை அங்கு சென்று அறிவிக்க யோனாவுக்குக் கர்த்தர் கட்டளையிட்டார் (1:1-2).

யோனா கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. ஏனென்றால், இரட்சிப்பு யூதருக்கு மட்டுமே உரியது என்பது யோனாவின் தவறான எண்ணம்.

அவன் கர்த்தருடைய சமுகத்திலிருந்து விலகி ஓடினான். கிழக்கே 800 கிமீ தொலைவிலிருந்து நினிவேக்குச் செல்லாமல், மேற்கே 4000 கிமீ தொலைவிலிருந்த

தர்ஷீசுக்குப் போக கப்பல் ஏறினான். எனவே இவனைப் 'பாதை மாறிய புறா' என அழைப்பதுண்டு.

### யோனாவின் தர்ஷீஸ் பயணம்: (அதிகாரம் 1)

கர்த்தருடைய சமுகத்திலிருந்து விலகி தர்ஷீஸிக்குக் கப்பலேறிய யோனாவைக் காத்தருடைய கருணை விடவில்லை. அவன் பயணம் செய்த மத்தியத்தரைக் கடலிலே பெருங்காற்றைக் கர்த்தர் வரவிட்டபடியால் கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பலில் இருந்த அனைவரும் தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்தனர். சரக்குகளைக் கடலிலே எறிந்துவிட்டனர்.

யோனாவோவென்றால் கப்பலின் கீழ்த்தட்டில் இறங்கிபோய் படுத்துக்கொண்டு அயர்ந்த நித்திரைபண்ணினான்.

அப்பொழுது மாலுமி அவனை எழுப்பி உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள் என்று தீர்க்கதரிசியாகிய யோனாவை ஜெபம்பண்ணும்படி எழுப்பினான்! யார் நிமித்தம் அந்த கடல் கொந்தளிப்பு வந்தது என்று அறியும்படி சீட்டுப்போட்டுப் பார்த்தனர். யோனாவின் பேருக்குச் சீட்டு விழுந்தபடியால் அவனிடத்தில் விசாரித்தனர்.

தன்னிமித்தமே கொந்தளிப்பு வந்தது என்றும், தன்னை கடலில் போட்டுவிட்டால் காற்று நின்று கடல் அமையும் என்றும் யோனா சொன்னான். எனவே அவனைக் கடலில் தூக்கிப்போட்டனர். யோனா தீர்க்கதரிசியின் வார்த்தையின்படியே கடலில் அமைதி உண்டாயிற்று.

### யோனாவை விழுங்கிய மீனும் யோனாவின் ஜெபமும்: (அதிகாரம் 2)

கடலில் போட்டுவிடப்பட்ட யோனாவை காப்பாற்றும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனை ஆயத்தப்படுத்தியிருந்தார். அந்த மீன் வயிற்றிலே யோனா இராப்பகல் மூன்று நாள் இருந்தான்,(1:17). நீர் மூழ்கிக்கப்பல் போலிருந்த அந்த மீன் யோனாவுக்குப் பாதுகாப்பைத் தந்தது. அது திமிங்கலம் போன்ற பெரிய மீனாக இருந்திருக்கலாம். கர்த்தர் அற்புதமாய் அவனை அந்த மீனின் வயிற்றுக்குள்ளே மூன்று இரவும் மூன்று பகலும் உயிருடன் காத்தார். அது அவனை விழுங்கியது.

தான் சாகாமல் காக்கப்பட மீனின் வயிற்றிலிருந்து யோனா விண்ணப்பம் பண்ணினான். கர்த்தருக்கு நன்றி செலுத்தினான். நான் கீழ்ப்படிவேன் என்று பொருத்தனை பண்ணினான். கர்த்தர் மீனுக்குக் கட்டளையிட்டார். அது அவனைக் கரையிலே கக்கிவிட்டது. கூலி கொடுத்து கப்பல் ஏறிய யோனா, இப்பொழுது பயணச் செலவின்றி மீண்டும் கரையிலே வந்து சேர்ந்தான்!

எந்த இக்கட்டுகளிலும் நாம் ஜெபிக்கும்போது கர்த்தர் அற்புதம் செய்து நம்மை விடுவிப்பார் என்பதை விசுவாசப்பிள்ளைகள் மனதிற்கொள்ள வேண்டும்.

### கீழ்ப்படிந்த யோனாவும் அவனது நினிவே பயணமும்: (அதிகாரம் 3)

இரண்டாந்தரம் யோனாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாயிற்று. நினிவேக்குப் போகும்படி கட்டளை பெற்றான். இது அவனுக்கு கிடைத்த இரண்டாம் வாய்ப்பு (Second Chance). நினிவேயின்மேல் கர்த்தர் காட்டிய கருணையின் வெளிப்பாடு!

நினிவே மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரம் என்று வாசிக்கிறோம் (3:3). நினிவேயில் 120,000 (ஒரு இலட்சத்து இருபதாயிரம்) ஜனங்கள் இருந்தார்கள், (4:11). இந்த நகரம் இதக்கேல் நதிக்கரையில் அமைந்துள்ளது. இன்று அது ஈராக்கிலுள்ள மோசுல் என அழைக்கப்படுகிறது. ஆதி 10:11-12-ன்படி நிம்ரோத் இதை நிறுவினான். அசீரியாவில் பிரசித்தமான நகரம் இது. பராக்கிரமத்துக்குப் பெயர்போன இப்பட்டணம் துன்மார்க்கத்துக்கும், துஷ்டத்தனத்துக்கும், கொடூரத்துக்கும் பெயர் பெற்றது. இவர்கள் தங்களது எதிரிகளின் காதுகளையும் மூக்கையும் அறுத்து

கோறையாக்கினர். அவர்களைக் கொன்று தோலை உரிந்து சுவர் காகிதங்களாக (Wall-Paper) ஒட்டி வைத்தனர். எதிரிகளின் தலைகளை வெட்டி தேங்காய் அம்பாரம்போல் குவித்து வைத்தனர். நினிவேயின் தெருக்களில் மனிதர்கள் கொலை செய்யப்பட்டு ரத்தம் ஆறாக ஓடிற்று. தெய்வ பயமில்லாமல் வாழ்ந்த இவர்கள் விக்கிரக ஆராதனை செய்தனர். கருக்கலைப்பு, சிசுக்கொலை, விபச்சாரம், வேசித்தனம் போன்ற பயங்கர பாவங்களில் வாழ்ந்து வந்தனர். இப்படிப்பட்ட மக்களுக்கும் தமது கருணையை அளவில்லாமல் பொழிந்தருளிய நமது கர்த்தருக்கு ஈடு இணை எவருமில்லை! எனவே யோனாவுக்கு இன்னொரு வாய்ப்பைக் கொடுத்தார்.

கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நினிவேக்குச் சென்ற யோனா அங்குள்ள மக்களுக்கு நியாயத்தீர்ப்பின் செய்தியைப் பிரசங்கித்தான். “இன்னும் நாற்பது நாட்கள் உண்டு. அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்'' என்பதே யோனாவின் செய்தியாயிருந்தது.

யோனாவின் பிரசங்கத்தைக் கேட்ட நினிவே முழுவதும் மனந்திரும்பிற்று. அரசன் முதல் கடைசிக் குடிமகன் வரைக்கும் மிருகங்கள் உட்பட அனைவரும் இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, உபவாசித்து, கர்த்தருடைய மன்னிப்பிற்காகவும் இரக்கத்துக்காகவும் கெஞ்சினர். அவர்கள் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினார்களென்று கர்த்தர் கண்டு, அவர்களுக்குச் செய்வேனென்று அறிவித்த நியாயத்தீர்ப்பைச் செய்யாமல் கருணை காட்டினார்.

### விரக்தியில் யோனா: (அதிகாரம் 4)

நினிவேயின் மக்கள் மனந்திரும்பினார்கள். கர்த்தரிடம் இரக்கத்துக்காகக் கெஞ்சினர். தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்கள் (3:10).

கர்த்தர் காட்டின கருணையை யோனாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கர்த்தரிடம் முரண்டுபிடித்து, விரக்தியின் உச்சத்துக்கே சென்று தன்னில்தானே சாவை விரும்பினான். கீழ்க்காணும் வசனங்களை கவனியுங்கள்.

“கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே நான் இதைச் சொல்லவில்லையா? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன், நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்.

இப்போதும் கர்த்தாவே, என் பிராணனை என்னை விட்டு எடுத்துக்கொள்ளும். நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்'' (யோனா 4:2,3).

அவன் நகரத்துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு நகரத்துக்குச் சம்பவிக்கப் போகிறதைப் பார்ப்பேன் எனக்கூறி அங்கு அமர்ந்தான். கடுமையான வெயிலில் உட்கார்ந்து மனமடிவாயிருந்த யோனாவின் மனமடிவிற்கு அவனை நீங்கலாக்க கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை குடிசையின்மேல் நிழல் கொடுக்கும்படி வளரச் செய்தார். யோனா கொஞ்சம் சந்தோஷப்பட்டான்.

ஆனாலும் அவனுக்குப் பாடம் புகட்டக் கர்த்தர் ஒரு பூச்சிக்குக் கட்டளையிட்டார். அது ஆமணக்கைத் தின்று அழித்துப்போட்டது. பின்னும் கர்த்தர் உஷ்ணமான கீழ்க்காற்றுக்குக் கட்டளையிட்டார். அது யோனாவுக்கு இன்னும் மனமடிவை உண்டாக்கிற்று.

''அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார். அதற்கு அவன் நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான் என்றான்.

அதற்கு கர்த்தர் நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே அழிந்து போனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே.

வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார் (யோனா 4:9,10,11).

எனினும் தனது குறுகிய மனப்பான்மையிலிருந்து யோனா மனந்திரும்பினான் என்று இப்புத்தகத்தில் நாம் வாசிக்கவில்லை. ஆனால் துன்மார்க்கரான நினிவேயின் மக்கள் தங்களுக்குக் கருணை காட்டின கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து மனந்திரும்பினார்கள் எனக் காண்கிறோம்.

**நூறு ஆண்டுகளுக்குப் பின்:**

யோனாவுக்கு 100 ஆண்டுகளுக்குப் பின் வந்த தீர்க்கதரிசிகளான நாகூமும் செப்பனியாவும் மீண்டும் தங்கள் கொடூரத்துக்குத் திரும்பிவிட்ட இதே நினிவேக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைத்தனர். அதற்கு வரும் நியாத்தீர்ப்பையும், அழிவையும் முன்னறிவித்தனர்.

அதன்படியே, பாபிலோனியராலும் மேதியராலும் நினிவே கிமு 612-ல் கவிழ்க்கப்பட்டது.

**யோனாவின் புத்தகம் நமக்குக் கற்பிக்கும் பாடம் என்ன?**

கீழ்ப்படியாமை, தேவனுடைய இறையாண்மை, மன்னிப்பு மற்றும் கிருபை ஆகியவற்றைப் பற்றிய ஆழமான பாடங்கள் இப்புத்தகம் நமக்குக் கற்றுத்தருகிறது.

- தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவனுடைய கட்டளைக்குத் தப்பி ஓட முடியாது.
- தேவன் சர்வவியாபி. தேவனுடைய பார்வையிலிருந்து யாரும் மறைந்திருக்க முடியாது.
- யார் எவ்வளவு பெரிய பாவம் செய்திருந்தாலும் அவர்கள் மனந்திரும்பினால் தேவன் மன்னிப்பார்.
- தேவனுடைய அன்பு அனைவருக்குமுரியது (யூதருக்கு மட்டுமல்ல). அது எல்லா தேசங்களுக்கும், மக்களுக்கும் உரியது.
- உண்மையான மனந்திரும்புதல் ஒருவருடைய முழுவாழ்க்கையையும் மாற்றி நல்ல எதிர்காலத்தைத் தரும்.
- தேவன் பொறுமையுள்ளவர். நமது பிடிவாதமான சூழ்நிலையிலும் தேவன் நம்மீது அன்பு வைத்து பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, பிறர்மீது அன்புகூர்ந்து, தேவன் எப்படி மன்னிப்பாரோ அதேபோல நாம் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்ற மேலான போதனையையும் இப்புத்தகம் நமக்குத் தருகிறது.

**நமது சிந்தனைக்கு:**

- துஷ்டரான நினிவே மக்களைப் போன்று இருக்க வேண்டாம்.
- கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் கப்பல் ஏறி எதிர்திசையில் தூர பயணம் செய்தல் மிக ஆபத்தானது.
- மீனின் வயிற்றுக்குள் இருப்பது போன்ற கடினமான சூழ்நிலையிலும் உபவாசித்து, ஜெபித்து, பொருத்தனை செய்து கர்த்தரைத் தேடினால் நிச்சயம் விடுதலை உண்டு.
- இரண்டே சொற்றொடரிலான நியாயத்தீர்ப்பின் செய்தியைக் கேட்டு மனந்திரும்பிய நினிவே மக்களைப் போல எப்பொழுதும் மனந்திரும்ப ஆயத்தமாயிருப்போமாக.
- யோனாவைப் போல எரிச்சலும் கோபமுமாய் விரக்தியடைந்து குடிசைக்குள் அமர்ந்து சாவைத் தேட வேண்டாம். கர்த்தர் கருணைமிக்கவர்.

# A.G Tamilnadu Bible College

(An ATA Accredited Institution)
Post Box No. 1, Bye-pass Road,
Kalavasal, Madurai- 625016

Since 1948

## 2026-2027 ADMISSIONS OPEN

### Residential Studies (For Men Only)

**Master of Divinity (M.Div.)**
Medium : English | Duration : 3/2 Years
Eligiblity : 10,+2,+3 Pass (Any Degree from Recognized University / ATA Accredited B.Th. with B or B+ Grade).

**Bachelor of Theology (B.Th.)**
Medium : English & Tamil | Duration : 3 Years
Eligiblity : 10,+2 Pass / ATA Accredited Dip.Th.

**Diploma in Theology (Dip.Th.)**
Medium : Tamil | Duration : 2Years
Eligiblity : 10 Pass

### Modular Studies (For Men & Women)

**Master of Divinity (M.Div.)**
Medium : English | Duration : 3/2 Years
Eligiblity : 10,+2,+3 Pass (Any Degree from Recognized University / ATA Accredited B.Th. with B or B+ Grade).

**Bachelor of Theology (B.Th.)**
Medium : Tamil | Duration : 3 Years
Eligiblity : 10,+2 Pass / ATA Accredited Dip.Th.

M.Div Study Centers: Coimbatore & Pallikaranai.
Men must be above 25 years/ Women must be married.

### Extension Studies (For Men & Women)

**Bachelor of Theology (B.Th.)**
Medium : Tamil | Duration : 3 Years
Eligiblity : 10,+2 Pass or it's equialent.

**Diploma in Theology (Dip.Th.)**
Medium : Tamil | Duration : 3 Years
Eligiblity : 10 Pass (10th Mark sheet is must).
(2years of study + 1year of practical ministry)

Comitted to full time ministry and ready to pioneer a church with the help of the local pastor
Age Limit: Men-married / Women- 25 years and above
*Men and Women with jewels are not admitted.*

**For Applications**
**WWW.AGTBC.ORG**

**Apply Now**
**Before 1st May 2026**

For Contact:
90035 14215, 97917 59118
0452-2601940, 0452-7968983
agtbc1948resi@gmail.com



ஆண்கள் ஐக்கிய ஊழியங்கள்

# கர்த்தருக்கு பிரியமான வழியில் பணத்தை சம்பாதிப்பது எப்படி?

நாம், உயிர்வாழ உணவிற்காக, அடிப்படை தேவைகள் சந்திக்கப்பட, பிள்ளைகளின் எதிர்கால தேவைகள் சந்திக்கப்பட, கைத்தொழில் மூலமாக வியாபாரம் செய்து, உத்தியோகம் செய்து, பகுதி நேர வேலை செய்து மற்றும் வாடகை மூலமாக பணத்தைச் சம்பாதிக்கிறோம். வியாபாரத்தில் நியாயமான இலாபத்தைப் பெறுவது தவறல்ல. ஆனால் அநியாயமான இலாபத்தைப் பெறுவது ஆசீர்வாதமல்ல, அநியாயமாய் ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறவன் முட்டையிட்டு அவயங்காத்தும், குஞ்சுபொரிக்காமற்போகிற கவுதாரிக்கும் சமானமாய் இருக்கிறான்; அவன் தன் பாதி வயதிலே அதை விட்டு தன் முடிவிலே மூடனாயிருப்பான் (எரே.17:1).

பிறருக்கு சொந்தமானதை அதற்குரிய கிரயத்தைக் கொடுக்காமல் ஏமாற்றியோ அல்லது பலாத்காரமாக பறித்தோ நமக்கு சொந்தமாக்கிக் கொள்வதே திருடுவதாகும். கள்ளத்தாரசு, கள்ளப்படிகளைப் பயன்படுத்தி பிறருடைய இழப்பில் நாம் இலாபம் அடைய நினைப்பதே ஏமாற்றி சம்பாதித்தலாகும். மனசாட்சிக்கு விரோதமாய் சட்ட விரோதமான முறையில் பணம் சம்பாதிப்பதும், குறைவாக முதலீட்டில் மிதமிஞ்சிய இலாபத்தை குறுகிய காலத்தில் எதிர்பார்ப்பதும் சூதாட்டமாகும். அநியாயத்தின் திரவியங்கள் ஒன்றுக்கும் உதவாது; நீதியோ மரணத்துக்குத் தப்புவிக்கும் (நீதி.10:2).

அநியாய வட்டிக்கு விட்டு, குறுக்கு வழியிலோ அல்லது சூதாடியோ, பிறரை ஏமாற்றியோ, அநியாய இலாபத்திலோ சம்பாதிக்கக் கூடாது. இளம் வயதிலே கர்த்தருக்கு பிரியமான வழியில் உழைத்து சம்பாதியுங்கள். அதே வேளையில் எவ்வளவு உயரமாய் பொருளாதாரத்தில் வளர விரும்புகிறீர்களோ அவ்வளவு நாட்கள் எடுக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். எனவே பனையைப்போல படிப்படியாக அதே வேளையில் உறுதியாக வளருங்கள் (சங்கீதம் 92:12).

### வருமானத்தை ஞானத்தோடு சேமிப்போம்!

மக்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கம் படிப்படியாக குறைந்துக்கொண்டு வருகிறது. கிறிஸ்தவர்களில் அநேகர் தேவன் வருமானத்தை தரும்போது ஞானமில்லாமல் செலவழித்துவிட்டு பின்பு கடனில் சிக்கித் தவிக்கிறார்கள். இன்றைய வருமானத்தை இன்றே செலவிட்டு விடாமல் எதிர்காலத் தேவைகளுக்காக எடுத்து வைப்பதே சேமிப்பாகும்.

வாகனம் மற்றும் வீடு பழுதுபார்த்தல், எதிர்பாராத மருத்துவ செலவுகள், திடீரென்று வேலையில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க குறைந்தது மூன்று மாதம் ஆறு மாத சம்பளத்தை சேமிப்பில் வைப்பது நல்லது. அத்தியாவசியத் தேவைகள், பிள்ளைகளின் மேற்படிப்பு மற்றும் திருமணத்தேவைகள்

சந்திக்கப்பட சேமிப்பு அவசியமாகும். வயதான காலத்தில் சொந்தக்காலில் நிற்க இப்போழுதே சேமிக்க ஆரம்பியுங்கள்.

நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள் (நீதி.6:6). கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்துவைக்கும் (நீதி.6:8; நீதி.30:25) என்று சேமிப்பைக் குறித்து வேதம் நமக்குப் போதிக்கிறது.

சேமிக்க சரியான திட்டமிடுதல் அவசியம். வரவைவிட செலவைக் குறைப்பதே சேமிப்பின் முதல்படியாகும். சம்பளம் கைக்கு வந்தவுடன் உங்கள் முதல் கனியை கர்த்தருக்குப் பிரித்து வைத்தவுடன், உங்கள் முதல் செலவு சேமிப்புக்காக பிரித்துவைப்பதாக இருக்க வேண்டும். வங்கியில் தொடர்வைப்பு நிதிமூலமாக சேமிக்கலாம். இடையிடையே விட்டுவிடாமல் தொடர்ச்சியாக சேமியுங்கள்.

இலக்கு வைத்து சேமிக்கத் துவங்குங்கள். அடுத்த மூன்று வருடத்தில் ஒரு வாகனம் வாங்க வேண்டும் என்ற இலக்கு வைத்து மாதந்தோறும் அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை சேமிக்கலாம். எடுத்தவுடன் பெரிய இலக்கு வைத்து அதை எட்டமுடியாமல் சோர்ந்து விடுவதைவிட சிறிய அளவிலிருந்து துவங்குங்கள். உங்கள் மாதாந்திர செலவிலோ அல்லது வீட்டு விழாக்களிலோ நீங்கள் மிச்சம் எடுக்கும் தொகையை செலவிடாமல் அதையும் சேமிப்பில் வையுங்கள். எதிர்பாராமல் வருகின்ற போனஸ், அரியர்ஸ், பிறவெகுமதி களையும் செலவிடாமல் சேமிப்பில் வைக்கப் பழகுங்கள்.

தேவன் தந்த ஆசீர்வாதங்களை உதறித்தள்ளிய ஏசா, பின்நாட்களில் என்னை ஆசீர்வதியும் என்று தன் தகப்பனிடம் மன்றாடியும் முழுமையான ஆசீர்வாதத்தைப் பெறவில்லை. எனவே தேவன் நல்ல வருமானத்தைத் தரும்போது இஷ்டம்போல செலவழித்துவிட்டு, வயதான நாட்களில் கஷ்டப்படுவதைவிட, உங்களுக்குப் பெலன் இருக்கும், இந்த நாளிலிருந்தே சிறுக சிறுக சேமிக்கத் துவங்குங்கள், எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளுங்கள்.

Rev. சாமுவேல் ஜெபராஜ்

---

## பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

### ஏ.ஜி. தலைமை அலுவலகம்

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664

# ஜெபத்தில் காணப்பட வேண்டிய ‘4’ எல்லாம்



“எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்” (எபே.6:18).

இந்த வசனத்தில் அதிகம் பயன்படுத்தப்படும் வார்த்தை ‘சகல’ ‘எல்லா’ (All) என்பதாகும். இந்த ஒரு வசனத்தில் மட்டும் 4 வகையான ‘எல்லா’ (All) என்ற பொருள்படும் வார்த்தைகள் உள்ளது.

### 1. எல்லா நேரத்திலும் (ALWAYS)

உண்மையான விசுவாசி தொடர்ந்து எல்லா நேரத்திலும் ஜெப சிந்தனையோடு வாழ்கிறார். இதைத் தான் தெசலோனிக்கேயருக்கு எழுதும் நிருபத்தில் “இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்” (1தெச.5:17) என்று பவுல் எழுதுகிறார். ஆம் நாம் தேவனோடு உரையாடுதல் இடைவிடாமல் எப்போதும் இருக்கும் பழக்கமாய் இருக்க வேண்டும் (அப்.10:2;12:12). எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்று இயேசு கூறுகிறார் (லூக்கா 21:36).

### 2. எல்லாவித ஜெபத்திலும் (ALL PRAYER)

நம் வாழ்வே ஜெப வாழ்வாய் இருப்பதால், நம் ஜெபங்களும் பல வகைப்பட்டதாக இருக்கிறது. ஒரு கிறிஸ்தவனின் ஜெபம் கிரமமாகவும், திட்டமிடப்பட்டதாகவும், குறிப்பானதாகவும் இருக்க வேண்டும். அவசர தேவைகளுக்கும் ஜெபிக்க ஆயத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள் சில துதிகள் நிறைந்ததும், ஆராதனையாகவும் மற்றும் பாவ அறிக்கை உள்ளதாகவும் இருக்கலாம். நாம் ஆவியோடு ஜெபிப்பதையும், உபவாசித்து ஜெபிப்பதையும், மன்றாடி ஜெபிப்பதையும், நன்றி செலுத்தி ஜெபிப்பதையும், பாவ அறிக்கை செய்து ஜெபிப்பதையும், போராடி ஜெபிப்பதையும், பயிற்சி செய்ய வேண்டும். இவற்றைத்தான் “எல்லாவித ஜெபத்தோடும்” என்று அப்.பவுல் குறிப்பிடுகிறார்.

### 3. எல்லாவித மன உறுதியோடும் (ALL PERSEVERANCE)

இது நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஜெபித்தல் என்பது இயல்பாக காணப்படுவதோ அல்லது எளிதான காரியமோ அல்ல. ஜெபிப்பதற்கு கடின உழைப்பும், விடாமுயற்சியும் தேவை. எல்லாவித மன உறுதியும் தேவை. நீங்கள் யாருக்காக ஜெபிக்கிறீர்கள்? எதற்காக ஜெபிக்கிறீர்கள்? சோர்ந்துபோகாமல் ஜெபியுங்கள். நாம் இடைவிடாமல், விடா முயற்சியுடன் ஜெபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்துள்ளார் (மத்தேயு 7:7; லூக்கா 18:1-8).

### 4. எல்லா பரிசுத்தவான்களுக்காகவும் (ALL THE SAINTS)

எல்லோருக்கும் நம் ஜெபம் தேவை. குறிப்பாக மற்ற விசுவாசிகளுக்காகவும், பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபித்தல் வேண்டும். தேவனுக்கு மிகப் பெரிதானதோ, அல்லது அற்பமானதோ எதுவும் கிடையாது. நாம் சில நேரங்களில் மட்டும், சிலருக்காக மட்டும், சில வகை ஜெபங்கள் மட்டும் செய்கிறோம். ஆனால் தேவன் எல்லாவற்றிற்காகவும், எல்லோருக்காகவும், எல்லா நேரங்களிலும் நாம் ஜெபிக்கவேண்டுமென்று விரும்புகிறார்.



# வடகிழக்கு மிஷன் இலக்கா


## Rev. A. எட்வின் பிரபாகர்

வடகிழக்கு மிஷன் இலாக்கா இயக்குநர்


TAMIL DISTRICT MISSIONS *India and beyond...*

பரிபூரண ஜீவன் வாசகர்கள் யாவருக்கும் வடகிழக்கு மிஷன் இலாக்கா மிஷனரி ஊழியங்களின் மூலமாக அன்பின் வாழ்த்துக்கள். இவ்விதழிலும் ஓர் சிறு தரிசன செய்தியை பகிர்ந்து கொள்வதில் சந்தோஷம் கொள்கிறேன்.

தமிழ் பிரதேசத்தின் மூலம் நடைபெறும் வடமாநில ஊழியங்கள், நாம் தாங்கி வரும் 650க்கும் மேற்பட்ட மிஷனரி குடும்பங்கள், எழுப்புதலின் பத்தாண்டு திட்டங்களில் நாம் செய்ய வேண்டிய அனைத்திற்காகவும் ஒவ்வொரு வாசகர்களும் அனுதினமும் ஜெபிக்க தயவாய் வேண்டுகிறேன். நம் தலைமுறையில் இன்று வடமாநிலங்களில் நாம் சந்திக்கும் சவால்களை தாண்டி ஜெயம் பெற, தேசம் சந்திக்கப்பட, மிகப்பெரிய எழுப்புதல் உண்டாக, தேவன் அநுக்கிரகம் செய்வார்.

### மனுஷனை பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளி இயேசு

இந்தியாவில் வாழும் தனிமனிதனின் நம்பிக்கையும், மீட்பும் இயேசுவே. இந்திய மக்கள் மீட்படைய இயேசு கிறிஸ்துவின் மெய்யான வெளிச்சத்தினை பெற்றிட நமது மிஷன் பணிகளையும் நமது மிஷனரிகளையும் தேவன் நிச்சயம் பயன்படுத்துவாராக, ஆசீர்வாதமாக்கி தமது நோக்கத்தை நிறைவேற்றிடுவாராக.

### உலகில் வந்த ஒளி இயேசு

யோவான் 3:19-ல் ஒளியானது உலகத்திலே வந்திருக்கிறது என்பதை அப்போஸ்தலனாகிய யோவான் தெளிவுப்படுத்துகிறார். கிறிஸ்துவின் அந்த ஒளி யோவான் 1:4-ன்படி ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கிடைக்க வேண்டிய ஒளி. இயேசுவின் ஒளி இருளிலே பிரகாசிக்கிற ஒளி, இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை என்று யோவான் 1:5 சொல்லுகிறது. இயேசுவின் ஒளி இந்த உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளி, மெய்யான ஒளி என்று யோவான் 1:9 சொல்லுகிறது.

இந்த ஒளியின் வெளிச்சத்தையும், ஆத்தும இரட்சிப்பையும் இந்தியாவின் ஒவ்வொரு மனுஷனும் மனுஷியும் பெற்றிட தேவன் அநுக்கிரகம் செய்வாராக. பகல் நேர சூரிய ஒளி உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் கிடைத்து பயன் உள்ளதாக இருப்பதுப் போல அதைவிட மேன்மையான கிறிஸ்துவின் ஒளி ஒவ்வொரு இந்திய பிரஜைக்கும் கிடைத்திட மிஷனரி பணியின் மூலம் தேவன் அநுக்கிரகம் செய்வாராக.

### நாம் உலகில் வந்த ஒளி இயேசுவை அறிவிக்கும் சாட்சிகள்

இன்றைய தலைமுறையில் இயேசுவை அறிந்து விசுவாசிக்கிற சகோதரனும் சகோதரியும் அவரின் சாட்சிகளாய் செயல்பட வேண்டிய உத்தரவாதத்தை நாம் பெற்றிருக்கிறோம். யோவான் 1:8ல் யோவான் ஸ்நானகனை குறித்து இப்படி வாசிக்கிறோம் இயேசுவாகிய ஒளியைக் குறித்து

சாட்சிக் கொடுக்கிறவனாய் வந்தான். ஒரு நாள் இயேசுவுக்காக வாழ்ந்தாலும் கிறிஸ்துவின் வெளிச்சத்தை கொடுத்து அந்த வெளிச்சத்தை அனைவரும் பெற்றுக் கொண்டு ஆசீர்வதிக்கப்படும் வாழ்க்கையை வாழ்வதே கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை. யோவான் ஸ்நானகனின் முன்மாதிரியை கவனித்தால் சிலகாலம் வாழ்ந்து தனி மனிதர்களையும், யூதேயாவின் வனாந்திரத்தை சுற்றிலும் யூதேயா நகரத்திலும், எருசலேம் நகரத்திலும் வாழ்ந்த மக்கள் கிறிஸ்துவின் ஒளியை அவர்கள் பெற்றுக்கொள்ள அறிவிக்கிறவனாக வாழ்ந்து பிரகாசித்தான். ஆயிரம் ஆயிரமான ஜனங்கள் அவனிடத்திலிருந்து வெளிப்பட்ட கிறிஸ்துவின் ஒளியினிடத்தில் ஓடி வந்து ஆத்தும மீட்பினை பெற்றுக்கொண்டனர். அதுப்போல நாமும் மெய்யான ஒளியான இயேசுவை நமது ஜனத்திற்கு அறிவித்திட கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள், அழைக்கப்பட்டவர்கள், தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள், உக்கிராணத்துவம் உள்ளவர்கள், உத்தரவாதம் உள்ளவர்கள் என்பதை அறிந்து தேவ அன்பினால் நிறைந்து, பரிசுத்த ஆவியானவரின் பெலத்தோடு இயேசுவை அறிவிப்போமாக. யோவான் 18:37ல் சத்தியத்தை குறித்து சாட்சிக் கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் என்று இயேசு சொன்னதுப் போல தேவ ஜனமாகிய நாம் ஒவ்வொருவரும் அனுதினமும் நாம் பார்க்கும் அனைவருக்கும் ஒளியாகிய இயேசுவை ஜீவனுள்ள சாட்சிகளாக அறிவித்து ஆதாயம் பண்ண தேவன் கிருபை செய்வாராக. குடும்பமாய் வடமாநிலங்களுக்கும் பிரயாணப்பட்டு வந்து ஒளியைக் குறித்து சாட்சிக் கொடுக்க தேவன் நமக்கு கிருபை செய்வாராக.

## நாம் உலகிற்கு வெளிச்சம் தரும் கிறிஸ்துவின் ஒளி

இயேசு கிறிஸ்துவை நாம் அறிந்து கொண்டபோது எபேசியர் 5:8 இன்படி கர்த்தருக்குள் வெளிச்சமாய் இருக்கிறீர்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துக் கொள்ளுங்கள் என்ற கட்டளையையும் பெற்றிருக்கிறோம். நமது ஆண்டவராகிய இயேசு மலைப் பிரசங்கத்தில்

மத்தேயு 5:15-ல் நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாய் இருக்கிறீர்கள் என்று கட்டளை கொடுத்திருக்கிறார். மத்தேயு 5:16-ல் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது என்கிற கட்டளையையும் நாம் பெற்று இருக்கிறோம்.

இதுவரை எப்படிப்பட்ட கிறுஸ்துவுக்குள்ளான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை சிந்திக்க, அர்ப்பணிக்க, செயல்பட, தீவிரப்பட தேவன் கிருபை செய்வாராக. வெளிச்சம் கொடுக்க வேண்டிய அவசரமான, அவசியமான, காலக்கட்டத்தில் நாம் வந்திருக்கிறோம். ஆவியானவரின் நிறைவோடு கிறிஸ்துவின் வெளிச்சத்தை வெளிப்படுத்தி எரிந்து பிரகாசிக்கிற அக்கினி ஜுவாலையாய் ஜொலிக்க தேவன் அநுக்கிரகம் செய்வாராக. கிறிஸ்துவுக்காக கிறிஸ்துவின் ஒளியை இந்திய மக்கள் பெற்றுக்கொள்ளும் வரை அயராது ஜெபிக்க, சாட்சியை அறிவிக்க, தேசத்தை கிறிஸ்துவுக்காய் சுதந்தரிக்க தேவன் கிருபை செய்வாராக.

தேவன் உங்களோடும் குடும்பங்களோடும் இருப்பாராக.
ஆமென்! ஆமென்!! ஆமென்!!!

# முறையான வேதாகம கல்வி

## கற்க ஓர் அரிய வாய்ப்பு

### சேர்க்கை நடைபெறுகிறது!




## முழு நேர கல்லூரி

முழு நேர ஊழிய அழைப்பை பெற்ற வாலிப சகோதரர்களுக்கு மட்டும்

**இடம் : புது வாழ்வு கொண்டாட்ட மையம், ஜமீன் பல்லாவரம்**

| | |
|---|---|
| **இறையியல் சான்றிதழ்** (C.Th.) | தகுதி : 10ஆம் வகுப்புக்கு கீழ் |
| **இறையியல் டிப்ளமோ** (Dip.Th.) | தகுதி : 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| **இறையியல் இளங்கலை பட்டம்** (B.Th.) | தகுதி : 12ஆம் வகுப்பு தேர்ச்சி |
| **இறையியல் முதுகலை பட்டம்** (M.Div.) | தகுதி : இளங்கலை பட்டம் |

## மாலை நேர கல்லூரி

ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும்

**இடம் : புது வாழ்வு A.G. சபை, சைதாப்பேட்டை**

| | |
|---|---|
| **கிறிஸ்தவ கல்வி சான்றிதழ்** (CCS) | தகுதி : 10ஆம் வகுப்புக்கு கீழ் |
| **கிறிஸ்தவ கல்வி டிப்ளமோ** (DCS) | தகுதி : 10ஆம் வகுப்பு தேர்ச்சி |
| **கிறிஸ்தவ கல்வி முதுகலை பட்டம்** (MACS) | தகுதி : இளங்கலை பட்டம் |

மேலும் விவரங்களுக்கு

**Rev. M. சம்பத் ✆ 95660 23973**

**Pr. N. சதீஷ் குமார் ✆ 89393 26174**

ASSEMBLIES OF GOD

## மெட்ராஸ் ஏ.ஜி. வேதாகம கல்லூரி

இக்கல்லூரி தேவ சங்க ஸ்தாபனத்தின் ஓர் அங்கமாகும் மற்றும் ஆசியா இறையியல் சங்கத்தின் (ATA) அங்கீகாரம் பெற்றது.



# இஸ்லாமியர்களின் கேள்விகள்


## Rev. ஜேக்கப் இஸ்ரேல்

இயக்குநர், இஸ்லாமியர் ஊழியங்கள்


**இஸ்லாமியர்கள் கிறிஸ்தவர்களை பார்த்து கேட்கும் கேள்விகளில் இதுவும் ஒன்று.**

**இயேசு தேவன் என்றால், அவர் மரித்திருந்த அந்த மூன்று நாட்களும் உலகம் எப்படி இயங்கியது?**

பதில் : ஒருவர் மரித்தால் அவர் **"முழுவதுமாக இல்லாமல் போய்விடுவார்"** என்பதே இக்கேள்வியில் மறைந்துள்ள ஒரு செய்தி அல்லது யூகமாகும். அதாவது இயேசு மரித்தார் என்றால் அவர் முற்றிலும் இல்லாமல் போய்விடுவார் என்று எண்ணித்தான் இந்த கேள்வியை கேட்கிறார்கள். மரணம் என்பதின் பொருளை முதலாவது சரியாய் புரிந்துக் கொள்ள வேண்டும். பரிசுத்த வேதம் இதை குறித்து என்ன சொல்கிறது என்று பார்க்கலாம்.

தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி, நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும், நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதி. 2:15-17). தேவனுக்கு கீழ்ப்படியாமல் தடுக்கப்பட்ட மரத்தின் கனியை புசித்த காரணத்தால், ஆதாமும் அவன் மனைவியும் தேவனின் பிரசன்னத்திலிருந்தும் ஏதேன் தோட்டத்திலிருந்தும் துரத்தப்பட்டார்கள்.

**முதல் மரணம் (Spiritual Death) :** இப்படி தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே கீழ்ப்படியாமையினாலும், பாவத்தினாலும் ஏற்பட்ட பிரிவையே **"ஆவிக்குரிய மரணம்"** என்று வேதம் சொல்கிறது.

"அக்கிரமங்களாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே. 2:1).

இயேசுவோடு ஐக்கியப்பட்ட விசுவாசிகள் கூட அவர்கள் மறுபிறப்பு அடைவதற்கு முன்பாக " பாவத்தில் மரித்தவர்களாக இருந்தார்கள்" என்று மேலே உள்ள வசனத்தில் பவுல் சொல்கிறார். பாவத்தில் மரித்தவர்கள் என்று பவுல் சொன்னாலும், விசுவாசிகள் இன்னும் உயிரோடு இருப்பவர்களாகவே இருந்தார்கள். மனிதன் பாவத்தில் மரித்தான் என்று சொன்னால், அவன் இல்லாமல் (அழிந்தே) போய்விடுகிறான் என்று பொருள் அல்ல. அதற்கு பதிலாக, அவன் அன்பான தேவனோடுள்ள நட்புறவிலிருந்து பிரிக்கப்பட்டான் என்பது தான் இந்த வசனத்தின் பொருளாகும். மேலும் இதை தான் **"ஆவிக்குரிய மரணம்"** என்று வேதம் சொல்கிறது.

**இரண்டாவது மரணம் (Physical Death):** பரிசுத்த வேதம் குறிப்பிடும் இரண்டாவது வகையான மரணம் **"சரீர மரணமாகும்"** ஆவியும், ஆத்துமாவும் சரீரத்தை விட்டு பிரியும்போது சரீர மரணம் ஏற்படுகிறது. இந்த ஆவியும், ஆத்துமாவும், சரீரத்தில் இருந்த நாட்களில், மனிதன் வேத சத்தியத்தின்படி நடந்திருந்தால் இவைகள் பரலோகம் செல்லும். இதற்கான வசனம் கீழே உள்ளது.

"நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர் களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்

பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள் (எபி.12:22-24).

அப்படி சத்தியத்தின்படி நடக்காதிருந்தால் பாதாளம் போகும். இந்த மரணத்திலும் ஒரு மனிதன் முற்றிலும் இல்லாமல் போவதில்லை. ஆக ஆவிக்குரிய மரணத்திலும், சரீர மரணத்திலும் ஒரு மனிதன் முற்றிலும் இல்லாமல் போவதில்லை என்பது தெளிவு. **இப்படியிருக்க, இந்த கேள்வி கேட்டவரின் புரிந்து கொள்ளுதல் பைபிளுக்கு எதிரானது மட்டுமல்ல, அது குர்ஆனுக்கும் எதிரானது என்பது தான் மிகவும் முக்கியமான விவரமாகும்.** இதற்கு ஆதாரனமான குர்ஆன் வசனங்கள்.

“இன்னும், அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை; (அவர்கள்) இறந்து விட்டவர்கள்“ என்று கூறாதீர்கள், அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர், எனினும் நீங்கள் (இதை) உணர்ந்து கொள்ள மாட்டீர்கள் **(குர்ஆன் :2:154).**

“அல்லாஹ்வின் பாதையில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று நிச்சயமாக எண்ணாதீர்கள் - தம் ரபினிடத்தில் அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்கள் - (அவனால்) அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள். தன் அருள் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக்கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள், மேலும் (போரில் ஈடுபட்டிருந்த தம் முஃமினான சகோதரர்களில் மரணத்தில்) தம்முடன் சேராமல் (இவ்வுலகில் உயிருடன்) இருப்போரைப் பற்றி அவர்களுக்கு எவ்வித பயமில்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் என்று கூறி மகிழ்வடைகிறார்கள்” **(குர்ஆன் :3:169-170).**

இதுவரை நாம் கண்ட விவரங்களிலிருந்து அறிந்துக்கொள்வது என்னவென்றால், இயேசு சிலுவையில் மரித்தார் இருப்பினும் அவர் “முற்றிலுமாக இல்லாமல் போகவில்லை”. ஆகவே அந்த மூன்று நாட்களும், அவரே பூமியை ஆட்சி செய்தார். இன்னொரு உதாரணத்தை கீழே உள்ள வசனத்தில் காணலாம்.

“இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள் இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார். அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள் **(யோவான் 2:19-22).**

இந்த வசனத்தில் “இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்” என்று வரும் இடத்தில், இயேசு தன் சரீரத்தை குறித்து சொன்னார். அவர் சொன்னது போலவே, அவர் சரீரம் பிலாத்துவின் அரண்மனையிலும், கல்வாரி சிலுவையிலும் இடிக்கப்பட்டது. மூன்றாம் நாள் அதை எழுப்பினார். **(அவர் உயிரோடு இருந்தபடியால் தான், அந்த சரீரத்தை அவரால் எழுப்ப முடிந்தது)** ஆக அவர் மரித்தும் உயிரோடு இருந்தார்.

‘‘நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான், நானே அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்த கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார் ” **(யோவான் 10:17-18).**

இயேசு தன்னை தானே மரணத்திலிருந்து உயிரோடு எழுப்ப வேண்டுமென்றால், அதற்கு உள்ள ஒரே வழி, அவர் உயிரோடு இருந்தால் தான் முடியும். இது நமக்கு இயேசு கல்லறையில் இருந்த மூன்று நாட்களில், அவர் இல்லாமல் போகவில்லை என்பதை நிரூபிக்கிறது. இயேசு எப்படி மரித்து உயிரோடு எழுந்தாரோ, அதே போல் அவரை விசுவாசிப்பவர்களையும் அவர் மரணத்திலிருந்து எழுப்ப வல்லராய் இருக்கிறார். ஆகவே அவரே விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் உண்மையான இறைவன் என்று உலகத்திலுள்ள பல வேதங்களில் அவரை குறித்து எழுதியிருக்கிறது. வேதங்களை இறைவனுடைய உதவியோடு ஆராய்ந்து அறிந்து இயேசு கிறிஸ்துவை தெரிந்து கொள்வோம்.

எல்லா புகழும் அவர் ஒருவருக்கே!

---

# AGVBS 2026 - Training Centres

| DATE | PLACE | CHURCH ADDRESS & LOCATION | CO-ORDINATORS |
|---|---|---|---|
| March 16 Monday | Vellore | Rev.J.Stanley Manickaraj<br>AG Church,<br>No.58, 2nd West Cross Road,<br>Gandhi Nagar West,Vellore | Pr. Sakthivel Shadrach<br>Cell: 95668 97628<br>Pr.ChandraMohan<br>Cell: 96550 38712 |
| March 17 Tuesday | Chengalpet | Rev. J.Ambrose Albert.<br>AG Church, Church Street,<br>Lake Avenue,T.K.M. Road,<br>Chengalpet | Pr.Ebenezer<br>Cell: 97888 90910<br>Pr. John Jaydson<br>Cell: 99419 84904 |
| March 18 Wednesday | Chennai (Nerkundram) | Rev. E.Jegil Ebi Doss.<br>New Creation AG Church,<br>Golden George Nagar,<br>Nerkundram, Chennai | Pr.Vincent<br>Cell: 98403 06113<br>Pr.Manikandan<br>Cell: 80560 59705 |
| March 19 Thursday | Chennai (Kolathur) | Rev. J.Devadasan Kalaiarasan.<br>Bethel AG Church,<br>No:6,5th Main Rd, Anusuya Nagar,<br>Kolathur, Chennai. | Pr. Jim David<br>Cell: 91766 82443<br>Pr. Sam Miracle<br>Cell: 91766 93113 |
| March 20 Friday | Chennai (Pallikaranai) | Rev. I.Christdhas.<br>Hope AG Church,<br>Pallikaranai, Chennai. | Pr. Prabhu<br>Cell: 99623 43567<br>Pr. Simeon<br>Cell: 9841863200 |
| March 21 Saturday | Pondichery | Rev. Stephen Asir,<br>Hallelujah AG Church,<br>Thennanjalai Road,<br>Pondicherry. | Pr.Nallathambi<br>Cell: 82206 72009<br>Pr. Mark<br>Cell: 93445 43514 |
| March 23 Monday | Trichy | Rev. S.Jeyaprakash.<br>Trichy City AG Church,<br>Ponnagar, Trichy. | Pr.Christy Alex<br>Cell: 99943 37758<br>Pr.Muthu Saravanan<br>Cell: 90955 79139 |
| March 24 Tuesday | Salem | Rev.R.Robert Singh.<br>AG Church,<br>Mamangam,Salem. | Pr. Jebastin<br>Cell: 97871 93148<br>Pr. Obeath<br>Cell: 94876 14383 |
| March 25 Wednesday | Covai | Rev.P. James Willingson.<br>Kovai City AG Church,<br>Selvapuram Bypass,<br>Ukkadam, Coimbatore. | Pr.Ravi Vincent<br>Cell: 93442 27759<br>Pr. Henry Solomon<br>Cell: 96983 83711 |
| March 26 Thursday | Madurai | Rev.T.Corban Singh.<br>Elim AG Church,<br>Koodal Nagar, Madurai | Pr. Arockia Santhanaraj<br>Cell: 98651 54782<br>Pr. Johnson<br>Cell: 86086 92030 |
| March 27 Friday | Tirunelveli | Pr. J.Joel Sam Paul.<br>Smyrna AG Church,<br>Vannarpettai,Tirunelveli. | Pr.Rajakumar<br>Cell: 94444 05446<br>Pr. Alex Peter Paul<br>Cell: 99947 63238 |
| March 28 Saturday | Tuticorin | Rev. S.Gideon Anderson.<br>Pearl City AG Church,<br>3rd Mile, Tuticorin | Pr.Mathan Samuel<br>Cell: 90430 39994<br>Pr.David Raja<br>Cell: 98941 46862 |

நேரம் : காலை 9.30 மணியிலிருந்து மதியம் 2.00 மணி வரை

Order Form இரண்டையும் நிரப்பிக் கொண்டு வரவும் மதிய உணவு பயிற்சிக்கு வருபவர்களை பொறுத்தது.



# தமிழ் பிரதேச வாலிபர் ஊழியங்கள்

**Rev. S. கோபிநாத்**

President, Christ's Ambassadors

## மேன்மைப்படுத்தும் கர்த்தர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் ஊழியத்தின் சார்பில் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

...இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப் படுத்துவேன் (யோசுவா 3:7).

வாலிபனாகிய யோசுவாவை ஜனங்கள் எல்லாருக்கும் முன்பாக மேன்மைப்படுத்தின கர்த்தர் கிறிஸ்துவின் ஸ்தானிகர்களாய் இருக்கிற உங்கள் ஒவ்வொருவரோடும் கூட இருந்து உங்களை மேன்மைப்படுத்துவாராக.

மோசேயோடு கர்த்தர் இருந்ததுபோல யோர்தான் நதியை கடக்குமுன் யோசுவாவோடும் கர்த்தர் இருப்பதை இஸ்ரவேலர் அறிந்துகொள்ளும்படிக்கு யோசுவாவிற்கு வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் அதை யோசுவாவின் வாழ்க்கையிலே நிறைவேற்றினார்.

மேன்மையையும், உயர்வையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற உங்களையும் கர்த்தர் மேன்மைப்படுத்துவார். யோசுவாவிற்கு முன்பாக இருந்த சவால்கள், மக்களின் எதிர்பார்ப்புகள் அநேகம். ஜனங்களை வழிநடத்துவது, இராஜ்யத்தை சுதந்தரிப்பது, அதைப் பங்கிடுவது போன்ற பெரிய சவால்கள் இருந்தது.

மிகப்பெரிய தலைவனாகிய மோசேயினால் வழிநடத்தப்பட்ட ஜனங்களின் பார்வையில் யோசுவா வாலிபனாகவும், போதுமான அனுபவங்கள் இல்லாதவனாகவும், சாதாரணமானவனாகவும் காணப்பட்டான்.

தலைவனின்றி தவித்து நின்ற நிலையில் கர்த்தர் யோசுவாவிடம் நான் மோசேயோடு இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் என்று தைரியத்தையும் தந்தார். இஸ்ரவேலர் இதை அறிந்துகொள்ளச் செய்தார், மேன்மைப்படுத்தினார். யோசுவா தலைவனாக மேன்மைப்படுத்தப்பட அவனிடம் காணப்பட்ட மூன்று முத்தான காரியங்களை நாம் கற்றுக்கொள்வோம்.

### 1. தேவனோடு இருங்கள் : Be with God

(யாத்திராகமம் 3:11) வாலிபனாகிய யோசுவா தேவப் பிரசன்னத்தை விட்டு பிரியாதிருந்தான். தேவனோடிருந்த யோசுவா சென்ற இடமெல்லாம் கர்த்தர் அவனோடிருந்து மேன்மைப்படுத்தினார்.

Life without God is like an unsharpened pencil. It has no point - Dr.Billy Graham.

சகல நன்மைகளும், ஆசீர்வாதங்களும், மேன்மைகளும் நம்மை உண்டாக்கின தேவனிடமிருந்து வருகின்றன. நாம் அவரைத் தேடும்போது, நமது வாழ்வில் முதலிடத்தைக் கொடுக்கும்போது தேவன் நம்மை மேன்மையாக வைப்பார்.

என்னைச் சிநேகிக்கிறவர்களை சிநேகிக்கிறேன். அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள் (நீதி. 8:17). நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார் (2 நாளா.15:2).

## 2. தேவ வார்த்தையோடு இருங்கள் : Be with God's word

If you carry the Bible when you are young. The Bible will carry you when you are old.

யோசுவா 1:7,8-ன் படி கர்த்தர் யோசுவாவிடம் நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படி செய்ய கவனமாயிருந்தால் புத்திமனாய் நடந்து கொள்வாய். வழியை வாய்க்கப்பண்ணுவாய் என்றார்.

கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமாய் இருக்கிற வசனத்தை தியானித்து (சங்கீதம் 119:105), அதன்படி செய்யும்போது நாம் செய்வதெல்லாம் வாய்க்கும். 1 யோவான் 2:14-ன்படி தேவ வசனம் நிலைத்திருந்தால் பொல்லாங்கனை எளிதாய் ஜெயித்து மேன்மை அடைய முடியும்.

உலகில் எதிர்காலத்தை முன்னறிவிக்கும் ஒரு புத்தகம் பைபிள் மட்டுமே. காலை செய்தித்தாளை விட பைபிள் நவீனமானது. வாக்குத்தத்தங்கள் அடங்கியது, மற்ற புஸ்தகங்களைப் போல அல்லாமல் அது மாறவோ அல்லது காலாவதியாகவோ இல்லை. வேத வசனம் உங்கள் அனுபவமாக மாறும்போது உங்கள் வாழ்க்கையும் சரித்திரமாகும்.

## 3.தேவ ஊழியரோடு இருங்கள் : Be with God's Minister

யாத்திராகமம் 24:13;32:17;17:10-16 மேற்கண்ட வசனங்களில் யோசுவா, மோசேயோடு இருந்த சம்பவங்களை நாம் வாசிக்க முடியும். எபிரெயர் 13:17-ன் படி நம்மை நடத்துகிறவர்கள், நமக்காக உத்தரவாதம் செய்கிறவர்களோடு இணைந்து, அவர்களுக்கு கீழ்படிந்திருந்தால் மேன்மை அடைய முடியும்.

தேவனோடிருந்து, தேவ வார்த்தைகளோடு, கர்த்தருடைய தாசனாகிய மோசேயோடு இருந்த யோசுவாவை (யோசுவா 4:14). கர்த்தர் இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக மேன்மைப்படுத்தினார். மோசேக்கு இஸ்ரவேலர் பயந்திருந்ததுபோல, யோசுவாவுக்கும் அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் பயந்திருந்தார்கள்.

பிரவாகித்து வந்த யோர்தான் குவியலாக நின்றது (யோசுவா 3:13-17).

எவரையும் மேன்மைப்படுத்தவும், பலப்படுத்தவும் செய்கிற கர்த்தர் உங்களோடிருந்து, எல்லா ஜனங்கள் முன்பாக உங்களை மேன்மைப் படுத்துவாராக. உங்கள் வாழ்வில் நடைபெறுகிற உயர்வுகள் மூலம் தேவனின் நாமம் மேன்மை அடைவதாக! ஆமென்.

---


## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.


## இயேசுவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் ஆசீர்வாதங்கள்



1. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் கிடைக்கிறது (1 பேதுரு 1:18,19; கொலோ. 1:14; எபே.1:7; எபி.9:12).
2. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு சமீபமாகிறோம் (எபே.2:11-13).
3. இயேசுவின் இரத்தம் நம்மை பாவங்களறக் கழுவி சுத்திகரிக்கிறது (வெளி.1:5; 1 யோவான் 1:7).
4. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கப்படுகிறோம் (வெளி. 1:5).
5. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு சமாதானம் உண்டாகிறது (கொலோ. 1 : 20).
6. இயேசுவின் இரத்தத்தின் மூலம் நாம் சாத்தானை ஜெயிக்கிறோம் (வெளி. 12 : 11).
7. இயேசுவின் இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு நம்முடைய மனச்சாட்சியை செத்த கிரியைகளறச் சுத்திகரிக்கிறது (எபி.9:14).
8. இயேசுவின் இரத்தம் தேவனுடைய பரிசுத்த சந்நிதிக்குள் பிரவேசிப்பதற்கு நமக்கு தைரியத்தை கொடுக்கிறது (எபி.10:19,20).
9. இயேசுவின் நித்திய உடன்படிக்கையின் இரத்தம் நம்மை சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தினவர்களாக்குகிறது (எபி.13:20, 21).
10. இயேசுவின் இரத்தம் நம்மை நீதிமான்களாக மாற்றி, தேவனுடைய கோபாக்கினைக்கு நீக்கி நம்மை இரட்சிக்கிறது (ரோமர் 5:9).

## சிலுவையில் மலர்ந்த 7 பூக்கள்
### இயேசு சிலுவையில் பேசின ஏழு வார்த்தைகள்

| | |
|---|---|
| 1. மன்னிப்பு | - லூக்கா 23 : 34 |
| 2. இரட்சிப்பு | - லூக்கா 23 : 43 |
| 3. அரவணைப்பு (அன்பு) | - யோவான் 19 : 26, 27 |
| 4. தத்தளிப்பு | - மத்தேயு 27 : 46 |
| 5. தவிப்பு | - யோவான் 19 : 28 |
| 6. பூரிப்பு | - யோவான் 19 : 30 |
| 7. ஒப்புவிப்பு | - லூக்கா 23 : 46 |


ADMISSION OPEN FOR
THE ACADEMIC YEAR 2026-2027
Antioch Biblical Seminary & College
TEACHING THE TRUTH IN LOVE
ABSC
ANTIOCH BIBLICAL
SEMINARY & COLLEGE
Affiliated with the Tamil District Council of SIAG
Accredited by Asia
Theological Association
(ATA)
COURSES OFFERED
Apply
Soon
Diploma In Theology
Bachelor of Theology
Master of Divinity
M.Th. Program in Christian Theology
and Old Testament (Residential Programme)
will commence soon.
The College Reopens in the First Week of June, 2026
Contact:
Antioch Biblical Seminary & College
Post Box-05, Pondicherry University, Mathur Road, Puducherry-605014.
Admissions: +91 63852 08385
Administrator: +91 98948 96808
abscollege@gmail.com
www.antioch.in



# இதை நினைத்து புருஷனாயிருங்கள்

(பகுதி 5)

**Remember this, and Show yourselves MEN**


**Rev.R.தாசையா**

தேனி மண்டல தலைமைப் போதகர்


## மனைவிக்கு நல்ல புருஷராயிருங்கள்

ஒவ்வொரு புருஷனும் கிறிஸ்துவைத் தலையாக கொண்டு தன் மனைவியை, பிள்ளைகளை, குடும்பத்தை நடத்த வேண்டும். ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறானென்றும், கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும், நீங்கள அறிய வேண்டும் என்று விரும்புகிறேன் (1கொரி.11:3).

வேதம், புருஷன் என்ற கணவனுக்கு ஒரு பெரிய முக்கியத்துவத்தை கொடுக்கிறது. புருஷன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவன். புருஷனுக்காக ஸ்திரீ சிருஷ்டிக்கப்பட்டாள் (ஆதி.1:26,27). புருஷனிலிருந்து தோன்றியவள் ஸ்திரீ. தேவன், படைப்பில் புருஷனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் (மல்கியா 2:15).

குடும்ப ஆசீர்வாதத்தில் புருஷன், கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும். உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போல் இருப்பாள். உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள். இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான். கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய். நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய் (சங்கீதம் 128).

இந்த குடும்ப ஆசீர்வாத சங்கீதத்தில், கர்த்தர், குடும்பத்திற்கு தலையாக புருஷனுக்கு முன்னுரிமை கொடுக்கிறதை பார்க்கலாம்.

புருஷனுடைய முக்கியத்துவத்தை குறித்து பவுல் கூறும்போது கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்கு தலையாயிருக்கிறான் (எபே.5:23) என்கிறார். மனைவியின் பொருட்டு புருஷன் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் உண்டு. புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகளை செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1கொரி.7:3)

ஒரு புருஷன் எவ்விதங்களிளெல்லாம் மனைவிக்கு நல்ல புருஷனாயிருக்க வேண்டுமென்பதை தியானிப்போம்.

### 1. அன்புகூறும் புருஷனாயிரு

புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள் (கொலோசெயர் 3:19). திருமண உறவின் அடிப்படை அன்புகூறுதல். ஒரு மனைவியினிடத்தில் எப்படி அன்பாயிருக்க வேண்டும் என்பதற்கு தேவன் இரண்டு மாதிரிகளை வேதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஒன்று, கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்ததுபோல புருஷர்களும் தங்கள் மனைவியினிடத்தில்

அன்புகூற வேண்டும். மற்றொன்று, ஒருவன் தன்னிலே தானே அன்பு கூறுவதைப் போல தன் தன் மனைவியினிடத்தில் அன்புகூற வேண்டும். புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூற வேண்டும் (எபேசியர் 5:25-27).

இதனிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (எபே.5:31; ஆதி.2:24). ஏவாளைப் பார்த்த உடன் ஆதாமின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள். “இவன் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்” (ஆதி.2:23) என்கிறான். அன்புகூறுவதற்கு இசைந்திருத்தல் அவசியம்.

## 2. திருப்திப்படுத்தும் புருஷனாயிரு

ஒரு கணவன், உணர்ச்சி, தாம்பத்திய உறவு சம்பந்தப்பட்ட காரியத்தில் மனைவியை திருப்திபடுத்த வேண்டும். மனைவியிடமே தாம்பத்திய உறவை சரிபார்க்க வேண்டும். ஸ்திரீயைத் தொடாமல் இருப்பது நல்லது என்றால்; தன் மனைவியை தவிர வேறு எந்த பெண்ணையும் தொட்டு பேசக்கூடாது. சிந்தையில் நினைக்கக்கூடாது. மனதில் தவறான எண்ணம் கொள்ளக்கூடாது என்பதே பொருள்.

ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவனவன் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் (1 கொரி.7:1-3).

இங்கே புருஷன் தன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமையை செய்ய வேண்டும் என்பதின் பொருள். தாம்பத்திய உறவில் **அவளை திருப்திபடுத்தும் புருஷனாக இருக்க வேண்டும் என்பதே.**

ஆன்மீக வாழ்க்கையில் கூடுதலான உபவாசம், ஜெபம், ஆவிக்குரிய கூட்டத்திற்கு மனைவியை விட்டு வெளியூர் செல்லுதல் ஆகியவை சம்மதத்துடனே செய்ய வேண்டும். இல்லையெனில் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படுத்த பிசாசுக்கு இடம் கொடுக்க நேரிடம்.

உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள். உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள் (1 கொரி.7:5).

கணவன் மனைவியிடையில் பிரிவினைக்கு இடமே இருக்கக்கூடாது. வேதம் அதை அனுமதிக்கவில்லை. தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்கக்கூடாது. இந்த இணைப்பை பிரிக்க பெற்றோர் காரணமாக இருக்கக்கூடாது (மாற்கு 10:6-9). இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரிந்துபோவது பரவலாக இருக்கிறது. இது தேவ ஜனங்களின் குடும்பங்களில் இருக்கவே கூடாது. **பிரச்சனைகள் வரலாம்; கருத்து வேறுபாடு வரலாம்; காரணங்கள் பல இருக்கலாம். அதை ஜெபத்தால், உபவாசத்தால், தேவ வசனத்தால், தேவ மனிதர்களின் ஆலோசனையினால், நமது பொறுமையால், விட்டு கொடுக்கும் தன்மையால் மேற்கொண்டு, கூடிவாழ முயற்சிக்க வேண்டும்.** புருஷன் மனைவியைத் தள்ளிவிடக்கூடாது. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்தார். இணைத்தார் என்று வாசிக்கிறோம் (1கொரி.7:5,11,12,15).

### 3. பண்புள்ள புருஷனாயிரு:

எல்க்கானாவின் மனைவியாகிய அன்னாளின் கர்ப்பத்தை தேவன் அடைத்திருந்தபடியால் அவளுக்கு பிள்ளையில்லாதிருந்தது. கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்திருந்தபடியால் அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும் படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள் (1 சாமு.15:6).

யாருக்கு அதிக கரிசனையும், அன்பும், சிநேகமும் தேவைப்படுகிறதென்றால் அன்னாளை போன்று ஒதுக்கப்பட்டு, ஓரம் கட்டப்பட்டு, தங்களிடத்தில் இருக்கும் ஏதோ ஒரு குறை (சரீர பாதிப்பு, தோற்றத்தில் விகாரம், வியாதிப்பட்ட சரீரம் குழந்தையில்லாத நிலை. குடும்பத்தில் மற்ற அங்கத்தினர்கள் புரிந்துகொள்ளாத நிலை) இருப்பவர்களுக்கு தான் அதிக நேசம் தேவைப்படுகிறது. அதுபோல அன்னாளின் கர்ப்பத்தை கர்த்தரே அடைத்திருந்தார். கூட இருப்பவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள், குறையை பயன்படுத்தி மனதை நோகடிக்கும் சூழ்நிலையில் நிம்மதி இழந்து, பண்டிகையில் உற்சாகம் இழந்து தனக்கு ஏற்பட்டிருக்கும் நிலைக்காக வருந்தும் அன்னாளுக்கு தன் கணவனின் சிநேகம் தேவைப்படுகிறது. எல்க்கானா தன் மனைவியை சிநேகித்தான். அவன் தன் அன்பை வார்த்தைகளில் காண்பித்தான். ஏன் அழுகிறாய்? ஏன் சாப்பிடாதிருக்கிறாய்? ஏன் சஞ்சலப்படுகிறாய்? பத்துக் குமாரரைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா என்றான்? (1 சாமுவேல் 1:8). எல்க்கானாவின் கேள்விகள் அனைத்தும் அன்னாளின் மேல் அவன் வைத்திருந்த அன்பிற்கான அடையாளங்கள்.

சிநேகம் காட்டுவது உண்மையானால் வெறும் வார்த்தையால் அல்ல. செயலில் காட்ட வேண்டும். அதை எல்க்கானா அன்னாளுக்கு செய்தான். எல்லாம் இருக்கிற பெனினாளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் பங்குகளை கொடுத்தான். அன்னாளுக்கோ இரட்டிப்பான பங்கு கொடுத்தான் (1 சாமு.1:4,5). இருப்பவனுக்கு அநேக சிநேகிதர் உண்டு. இல்லாதவனுக்குதான் சிநேகிதர் தேவை, சிநேகம் தேவை. **தரித்திரன் தனக்கடுத்தவனாகிலும் பகைக்கப்படுகிறான்; ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு (நீதி.14:20).**

அன்பார்ந்த திருச்சபை புருஷர்களே! உங்கள் குடும்பத்தார் உங்கள் மனைவியை உதாசீனப்படுத்தி, வெறுப்பைக் காட்டும்போது நீங்களும் குடும்பத்தாரோடு சேர்ந்துகொண்டு கடுஞ்சொல்லால் மனைவியை வேதனைப்படுத்தாதீர்கள். எத்தனை சகோதரிகள் கணவனின் அன்புக்காக சிநேகத்துக்காக ஏங்குகிறார்கள் தெரியுமா? இரட்சிக்கப்பட்டு இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்து, கிறிஸ்தவ வாழ்வு வாழ்கிற நீங்கள் மற்றவர்களைபோல் இருக்கக்கூடாது. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, அப்படியே புருஷர்கள் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூறுகிறான். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியிடத்திலும் அன்புகூரக்கடவன் (எபேசியர் 5:25,28,33). வார்த்தைகளை பேசுவதிலோ, மனைவியை கையாளும் விதத்திலோ, தாம்பத்திய உறவிலோ முரட்டு மனிதனாக செயல்படாமல், கிறிஸ்தவ பண்புகளை காட்டும் புருஷனாயிரு. எதற்கெடுத்தாலும் தர்க்கம் பண்ணும் புருஷனாகவோ, கோபப்படும் புருஷனாகவோ இராமல் சாந்தகுணமுள்ள புருஷனாக இரு (கொலோ.3:12-14). சபையின் புருஷர்களே உங்கள் மனைவியினிடத்தில் அன்புகூர்ந்து சிநேகிக்கும் கிறிஸ்தவராக வாழ்ந்து பாருங்கள். கணவன் மனைவியின் உறவும், உடலும், குடும்பமும் இனிமையாக இருக்கும்.

தொடரும்...

## ஊழிய அழைப்பு பெற்ற பெண்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு

# திரித்துவ வேதாகமக் கல்லூரி

(A Theological Institution of the Tamil District Council of SIAG)
Accredited by Asia Theological Association (ATA)

திரித்துவ வேதாகமக் கல்லூரி, மாணவிகள் தங்கி படிப்பதற்கான சிறந்த, நவீன வசதிகளைக் கொண்டுள்ளது.
அர்ப்பணிப்புள்ள சிறந்த கல்வித் தகுதியுடைய ஆவிக்குரிய அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு போதிக்கப்படுகிறது.

| Course | Duration | Eligibility |
|---|---|---|
| Master of Divinity (M.Div.) English | 3 Years | Any Bachelor Degree |
| Bachelor of Theology (B.Th.) - English | 3 Years | HSC (+2) Pass |
| Diploma in Theology (Dip.Th.) - Tamil | 2 Years | S.S.L.C Pass |

2026-2027-ம் கல்வியாண்டிற்கான மாணவியர் சேர்க்கை நடைபெற்று கொண்டிருக்கிறது.
விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டிய இணையதள முகவரி

Email: trinitybc1993@gmail.com | Website : www.trinitybiblecollege.in

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் வந்து சேர வேண்டிய

**கடைசி நாள் : மே 20, 2026**

தொடர்பு : The Registrar

**Trinity Bible College**

Kanakkapillaivasai, Post Box No. 25, Sengottai - 627 809
Phone : 04633 - 234243 & 99942 47117, 75985 43752



**சிறுவர் பகுதி**

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20
Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் குட்டீஸ் எல்லாரும் எப்படியிருக்கிறீங்க? கடந்த மாத இதழில் வெளியான சிறுவர் கதையை வாசித்து பலர் உங்கள் கருத்துக்களை தெரியப்படுத்தினீர்கள். அவைகளுக்காக தேவனை துதிக்கிறேன். தேர்வு காலம் வந்துவிட்டது. பயமின்றி தேர்வு எழுதி, உயர்ந்த நிலைகளில் வெற்றி காண உங்களுக்காக ஜெபிக்கிறோம்.. மனம் நிறைந்து வாழ்த்துகிறோம்.. ஒரு குட்டி கதை, கதை கேட்க ஆயத்தமா? வாங்க போகலாம்…

சேட்டைக்காரக் குரங்கு ஒன்று காட்டிலுள்ள ஒரு பெரிய மரத்தில் வாழ்ந்து வந்தது. அந்த மரத்தின் கீழ், அந்தக் காட்டின் ராஜாவான சிங்கம் தினமும் ஓய்வு நேரங்களில் வந்து படுத்து உறங்கும்.

சிங்கம் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் வேளையில், குரங்கு மெல்ல மரத்திலிருந்து இறங்கி வந்து, சிங்கத்தின் ஒரு காதை லேசாகத் தட்டிவிட்டு, எதிர் திசையில் விரைவாக ஓடிப்போகும். சிங்கம் திடுக்கிட்டு அந்தத் திசையில் திரும்பிப் பார்க்கும்; யாரும் தெரியாததால் மீண்டும் அமைதியாகக் கண் மூடும்.

இந்தச் சேட்டையை தினமும் செய்து வந்த குரங்கு, காட்டின் ராஜாவையே ஏமாற்றி விளையாடுகிறேன்! என்று தனக்குத்தானே பெருமை கொண்டு மகிழ்ந்தது. இத்தனை நாளாகியும் ராஜாவால் என்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற எண்ணம் அதன் அகந்தையை மேலும் பெரிதாக்கியது.

இந்த நிகழ்வை தினமும் கவனித்து வந்தது ஒரு நரி. ஒரு நாள், குரங்கு மரத்திலிருந்து கீழே வரும் சமயத்தில் அதை வேட்டையாட முடிவு செய்தது. சிங்கம் தூங்கும் நேரத்தை பார்த்து, புதரின் ஓரத்தில் பதுங்கி கொண்டு, குரங்கின் வருகைக்காகக் காத்திருந்தது.

வழக்கம்போல் குரங்கு தனது சேட்டையைச் செய்ய மரத்திலிருந்து இறங்கி, சிங்கத்தை நெருங்கியது. இதுதான் சரியான நேரம்! என்று நினைத்த நரி, மறைந்திருந்த இடத்திலிருந்து குரங்கைப் பிடிக்க பாய்ந்தது.

ஆனால் குரங்கைத் தொடுவதற்கு முன்பே, அதுவரை அமைதியாக படுத்திருந்த சிங்கம், தன் வலிமையான கால்களால் நரியை இடியென ஓங்கி அடித்தது. நரி புதரைத் தாண்டி தொலைவில் போய் விழுந்தது. சிங்கம் மீண்டும் எதுவும் நடக்காததுபோல் அமைதியாகப் படுத்துக் கொண்டது.

என்ன நடந்தது என்று புரியாமல், மரண பயத்தில் குரங்கின் கால்கள் நடுங்கின. உடனே அது மரத்தில் மீண்டும் ஏறி ஒளிந்துகொண்டது. குரங்கைத் தாக்க வந்த நரியின் சூழ்ச்சியை சிங்கம் அறிந்திருந்தால், குரங்கின் தினசரி சேட்டையை அது அறியாமல் இருந்திருக்குமா? இல்லை தானே. சிங்கம்

அமைதியாக இருந்ததால், அது எதையும் கவனிக்கவில்லை என்று குரங்கு தனது அறியாமையால் தவறாக எண்ணியது.

அன்பு தம்பி தங்கைகளே, யாரும் பார்க்கவில்லை என்று நினைத்து ஒருபோதும் தவறு செய்துவிடக்கூடாது. சிங்கம் அமைதியாக இருந்ததாலே அது எதையும் கவனிக்கவில்லை என்று குரங்கு தவறாக எண்ணியது. அதுபோல, நாம் வகுப்பறையில் எப்படி நடந்து கொள்கிறோம், வீட்டில் பெற்றோரிடம் எப்படி பேசுகிறோம், வெளியில் நண்பர்களுடன் என்ன செய்கிறோம் என எல்லாவற்றையும் நம்ம தேவன் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறார். மனிதர்கள் பார்க்காமல் இருக்கலாம்; ஆனால் தேவன் எதையும் பார்க்காமல் இருப்பதில்லை. யோசேப்பு போல தேவன் என்னைக் காண்கிறார் என்ற உணர்வுடன் வாழ வேண்டும் என இயேசப்பா விரும்புகிறார். இயேசப்பா அமைதியாக இருக்கிறார் என்று நினைத்து பாவத்தில் ஈடுபட வேண்டாம். அமைதி என்பது அனுமதி அல்ல; அது எச்சரிக்கை. எனவே எப்போதும் நன்றாக யோசித்து, தேவனுக்குப் பிடித்த வாழ்க்கையை வாழ முயற்சி செய்ய வேண்டும்.

தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார் (1 யோவான் 3:20).

தேவன் சகலத்தையும் அறிந்திருக்கிறார் என்பதை தெரிஞ்சுக்கோ.. அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை என்பதை புரிஞ்சுக்கோ..இந்த பகுதி உங்களுக்கு பிரயோஜனமாக இருந்திருக்கும் என நம்புகிறேன். உங்கள் மேலான கருத்துக்களை 9750381784 என்ற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம் தெரியப்படுத்துங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.. அடுத்த இதழில் உங்களை மறுபடியும் சந்திக்கிறேன்.. டாட்டா...

---




**கேரளா, பாண்டிச்சேரி, மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்களிலும் இந்த வருடம் நடைபெற உள்ள தேர்தலுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.**



# ஜெயம் கொடுக்கும் தேவன்
# GOD WHO GIVES VICTORY


## Rev.K. ராஜா

இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

பரீட்சையில் வெற்றி பெற வேண்டும் என்று தீவிரமாக படித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு மாணவர் ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்கள். மனுக்குலம் வாழ்க்கையில் தோற்றுப்போய்விடக் கூடாது என்பதற்காக இயேசு சிலுவை சுமந்து, இரத்தம் சிந்தி, மரணத்தை ஜெயித்து, வெற்றி சிறந்தார் என்று கொலோ.2:15 கூறுகிறது. பாவத்தின் சம்பளமாகிய மரணத்திலிருந்து விடுதலை கொடுத்து, மனிதனை வெற்றிசிறக்கப்பண்ணின தேவன், உங்கள் பரீட்சையிலும் ஜெயத்தைக் கொடுக்க வல்லவர்.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1கொரி. 15:57).

### நீங்கள் பரீட்சையில் ஜெயம் பெற ஜெபத்தோடு கூடிய முத்தான மூன்று ஆலோசனைகள்

### THREE GREAT TIPS WITH PRAYER TO HELP YOU SUCCEED IN YOUR EXAMS

1. விசுவாசம் (FAITH), 2. ஆயத்தம் (PREPARATION), 3. ஆலோசனை (COUNSEL).

### 1. விசுவாசம் ஜெயத்தைக் கொண்டு வரும் (FAITH BRINGS VICTORY)

தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவான் 5:4).

வெற்றி சிறந்த இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசம் ஒரு நாளும் தோற்றுப்போகாது. பரீட்சையைக் குறித்த உங்களது பயம், சந்தேகம், குழப்பம் எல்லாவற்றையும் மேற்கொள்ள வல்லமையுள்ளது உங்கள் விசுவாசம். அது உங்களை பெலப்படுத்தும். தேவனை விசுவாசிக்கிறவர்கள், நான் விசுவாசிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு சோம்பேறியாகவோ, தேவையில்லாத வேலைகளை செய்து கொண்டோ இருக்க மாட்டார்கள். விசுவாசம் கிரியை (வேலை) செய்யும் (யாக். 2:14). விசுவாசம் ஜெயிக்கும் (எபி. 11:33).

- Faith is taking the first step even when you don't see the whole staircase -Martin luther King.
- Faith is unseen but felt, faith is strength when we feel we have none, faith is hope when all seems lost - Cathrine Pulsifer.

### 2. ஆயத்தம் ஜெயத்தைக் கொண்டு வரும் (PREPARATION BRINGS VICTORY)

குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் (நீதி. 21:31).

ஜெயிக்க வேண்டும் என நினைக்கிறவர்கள் விசுவாசம் தருகிற பெலத்தோடு, தங்களால் இயன்ற மட்டும் கடுமையாக முயற்சி செய்வார்கள். ஒரு தாலந்தை பெற்றுக்கொண்ட மனிதனிடம் விசுவாசம் இருந்தது. ஆனால் அதற்கேற்ற உழைப்பு இல்லை. தோற்றுப்போனான். இரண்டு மற்றும் ஐந்து தாலந்து பெற்றுக்கொண்ட மனிதர்கள் விசுவாசத்தோடு, அதற்கேற்ற உழைப்பை கொடுத்தார்கள். வெற்றி பெற்றார்கள் (மத்.25:15-30). தேவன் சோம்பேறிகளுக்கு உதவி செய்கிறதும் இல்லை. அப்படிப்பட்டவர்களை ஆசீர்வதிப்பதுமில்லை. உங்களுக்கு தேவன் கொடுத்திருக்கிற இந்த நல்ல வாய்ப்பில், நீங்கள் எடுக்கிற சின்னச்சின்ன முயற்சிகளையும் அவர் நிச்சயம் ஆசீர்வதிப்பார். விசுவாசத்தோடு முயற்சி செய்யுங்கள். ஜெயம் பெறுவீர்கள்.

- Education is the passport to the future, for tomorrow belongs to those who prepare for it today - Malcolm.X.
- Before anything else, preparation is the key to success - Alexander Graham Bell.
- By failing to prepare, you are preparing to fail.

### 3. நல்ஆலோசனை ஜெயத்தைக்கொண்டு வரும் (GOOD COUNSEL BRINGS VICTORY)

நல்யோசனை செய்து யுத்தம்பண்ணு, ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி. 24:6).

எந்த ஒரு காரியத்திலும் வெற்றி பெறுவதற்கு அதை எப்படிச் செய்ய வேண்டும் என்கிற ஆலோசனை உண்டு. எழுதப்போகும் பரீட்சைகளிலும் வெற்றி அடைய வேண்டுமானால், விசுவாசம், கடின உழைப்பு இவைகளோடு நல் ஆலோசனையும் அவசியம் என்பதை மறந்து விடக்கூடாது. எப்படி படிக்க வேண்டும், எப்படி படிக்கக்கூடாது. என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று நம்மை வழிநடத்துகிற நல் ஆலோசனைக்காரர்கள் தேவை. உங்களுடைய ஆசிரியர், பெற்றோர், போதகர் மற்றும் மூத்தவர்கள் சொல்லும் ஆலோசனைகளை கவனியுங்கள். அவைகள் நீங்கள் எதிர்பார்க்கும் ஜெயத்திற்கு உதவி செய்யும். ஆலோசனையில்லாத இடத்தில் ஜனங்கள் விழுந்துபோவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் (நீதி.11:14).

- Accept corrections and you will improve and increase - Israelmore Ayivor.
- We all need people who will give us feedback. That's how we improve - Bill Gates.
- Our chief want in life is somebody who will make us do what we can - Ralph Waldo Emerson

ஒரு வேளை முயற்சித்து தோற்றுப் போய் சோர்ந்து போயிருப்பீர்களானால், இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக் கொண்டிருப்பீர்களானால், வேதம் சொல்கிறது, நிச்சயமாகவே முடிவு உண்டு: உன் நம்பிக்கை வீண்போகாது (நீதி.23:18).

மீண்டும் துவங்குங்கள். தோல்விகளை ஜெயமாக மாற்றுகிற தேவன் ஒருவர் உண்டு. உங்களால் முடியும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (2 கொரி.2:14).



# தலைமுறை தலைமுறைக்கும் ஆண்டவருடைய சந்ததி

**Rev. S.P. ராஜசெல்வம்**

இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்த இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் அதிக மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நாட்களில் செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் அதிகமாக சிறுபிள்ளைகள் வாலிபர்கள் கடத்தப்படுவதும், துன்புறுத்தப்படுவதும், தற்கொலை செய்வதும் தினம் தோறும் நாம் கேட்கிற செய்திகளாக இருக்கிறது. இதை நாம் கேட்டுவிட்டு ஒரு செய்தியாக கடந்து போகாதபடி பாரத்துடன் அவர்கள் நிலையை அறிந்து ஜெபிக்கவும் ஆலோசனை கொடுக்கவும் அவர்களுக்கு ஏற்ற நல்ல வழியில் அவர்களை நடத்த கர்த்தர் நமக்கு தந்த கிருபையும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி அவர்களை பக்தி உள்ள சந்ததியாக உருவாக்குவது நமது கடமையாகும்.

சிறுவர்களை கிறிஸ்து இயேசுவுக்குள் நடத்துவதில் பெற்றோர்கள், ஆசிரியர்களாகிய நமக்கு மிகப் பெரிய பொறுப்பு உண்டு. வேதாகம அடிப்படையில், அவர்களுக்கு நல்ல நடைமுறை ஆலோசனைகளை கொடுக்க கீழ்காணும் காரியங்களை நாம் மேம்படுத்துவது அவசியம். அவைகளை என்ன என்று கீழே காண்போம்.

### 1. சிறுவர்களை நேசிப்பதே முதல் சாட்சி

இயேசுவின் மனப்பான்மை எப்படி இருந்தது என்றால் இயேசு கிறிஸ்து பிள்ளைகளையும் வெறுக்காமல் நேசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் சிறு பிள்ளைகளுக்கு ஆலோசனை சொல்வதற்கு முன்பு அவர்களை நேசிக்க வேண்டும். அவர்களுக்கு முன்பு சாட்சியாக வாழ்ந்து காட்ட வேண்டும். சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வர விடுங்கள் (மாற்கு 10:14).

குழந்தைகள் முதலில் அன்பை உணர செய்ய வேண்டும், பின்னர் நாம் சொல்லும் வார்த்தையை புரிந்துகொள்வார்கள்.

கடுமையான வார்த்தைகளினால் அல்ல மென்மையாக அவர்களை நடத்த வேண்டும்; கருணையும் பொறுமையும் அவர்களுக்கு காட்ட வேண்டும்.

ஒவ்வொரு பிள்ளைகளும் தேவனுடைய மதிப்புமிக்க, தேவனுடைய சொந்த சாயலில் படைக்கப்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தோடு அவர்களை பார்க்க வேண்டும். அன்பு செலுத்த வேண்டும்.

### 2. நம் வாழ்க்கையே பாடமாக இருக்க வேண்டும்

நீ விசுவாசிகளுக்கு மாதிரியாக இரு (1தீமோ.4:12).

பெற்றோர்கள், ஆசிரியர்களாகிய நமது பேச்சு, நடத்தை, ஜெப வாழ்க்கை அனைத்தும் உயிருள்ள சாட்சியாக இருக்க வேண்டும். இன்றைய சிறுவர்கள் அதிகமாய் நாம் என்ன சொல்கிறோம் என்பதை விட, நாம் என்ன செய்கிறோம் என்பதையும் நம்முடைய செயல்களை அதிகம் பார்க்கிறார்கள்.

கேட்பதை விட பார்க்கிறார்கள் எனவே அவர்களுக்கு முன்பதாக நாம் உண்மையாகவும் நேர்மையாகவும் மன்னிக்கிறவர்களாகவும் இயேசுவைப் போல அவர்களுக்கு முன்பதாக வாழ்ந்து காட்ட வேண்டும். இதுவே இயேசு நமக்கு கற்பித்து காட்டிச்சென்ற பாதையாகும்.

### 3. வேதாகமத்தை குழந்தைகளின் மொழியில் சொல்லுங்கள்

அவர்கள் உட்காரும்போதும் நடக்கும்போதும் அவற்றை கற்பி (உபாகமம் 6:6-7).

இன்றைய அனேக பெற்றோர்கள் நீளமான உபதேசம் செய்வதை விட்டு கதை, உதாரணம், பாடல், செயல் மூலம் சொல்லுங்கள்.

இயேசு உன்னை நேசிக்கிறார் என்ற உண்மையை தெளிவாக அவர்கள் உள்ளங்களில் பதிய வைக்க வேண்டும்.

### 4. பயத்தை காட்டி அவர்களை நடத்துவது அல்ல, கிருபையால் இயேசுவை அறிமுகப்படுத்தி அந்த கிருபையை பெற்றுக்கொண்டு வாழ ஊக்குவியுங்கள்.

பயமில்லை; பரிபூரணமான அன்பு பயத்தை வெளியே தள்ளும் (1 யோவான் 4:18).

தேவன் தண்டிப்பார் என்ற பயம் குழந்தைகளின் இதயத்தை விட்டு விலக்கலாம், மன்னிக்கும், அணைக்கும் அரவணைக்கும் இயேசு எனக்கு உண்டு என்று காட்டுங்கள். தவறு செய்தாலும், தேவன் நேசிக்கிறார் என்று உணரச் செய்யுங்கள்.

### 5. ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஜெபிக்கும் ஆசிரியராக இருங்கள்

சிறுபிள்ளைகளுக்காக நான் ஜெபிக்காமல் இருப்பது பாவம் (1 சாமு. 12:23).

பெயர் பெயராக ஜெபியுங்கள். வகுப்பிற்கு முன், பின் ஜெபிக்க கற்றுக் கொடுங்கள். பிள்ளைகளை சிறிய ஜெபம் செய்ய ஊக்கப்படுத்துங்கள். அதோடு கூட அவர்களை பயிற்றுவியுங்கள்.

### 6. விதைப்பவர் நீங்கள் – வளர்ப்பவர் தேவன்

நான் விதைத்தேன்; அப்பொல்லோ நீரூட்டினான்; தேவனே வளர்த்தார் (1 கொரிந்தியர் 3:6). வசனம், நல்லொழுக்கம், கீழ்ப்படிதல் என்கிற விதைகளை விதைப்போம். நிச்சயமாக தேவன் விளைய செய்வார். உடனே மாற்றம் தெரியாவிட்டாலும் மனம் தளர வேண்டாம். இன்று விதைத்த வார்த்தை, நாளை பலனளிக்கும் நாம் தோற்றுப் போவதில்லை நிச்சயமாய் தேவன் ஒரு நாள் பலன் அளிக்க செய்வார்.

### 7. குழந்தைகளை தேவனுடைய ராஜ்யத்தின் உறுப்பினர்களாக மதியுங்கள்

வானம் பூமி இவர்களுக்கே உரியது (மத்தேயு 19:14).

இன்னும் சிறு பிள்ளை என்று தாழ்த்தாதீர்கள். தேவன் அவர்களிடம் பேச முடியும். சிறுவயதில் வந்த விசுவாசம் வாழ்நாள் அடித்தளம் முழுவதற்கும் நான் போடுகிற அடித்தளம் நிச்சயமாய் அவர்களை ஒருநாள் விசுவாசத்தில் கம்பீரமாய் நிலைத்து நிற்க செய்யும். கர்த்தர் நிச்சயமாய் உங்களையும் நீங்கள் எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும் அபரிவிதமாய் ஆசீர்வதிப்பாராக

## போட்டி எண் : 15 (சரியான விடைகள்)

| | | |
|---|---|---|
| 1. | எலியாதா | - பராக்கிரமசாலி (17:17) |
| 2. | உசியா | - வெள்ளாண்மைப் பிரியன் (26:9,10) |
| 3. | இல்க்கியா | - ஆசாரியன் (34:14) |
| 4. | யோராம் | - சேஷ்ட புத்திரன் (21:3) |
| 5. | எசேக்கியா | - அணை கட்டியவன் (32:30) |
| 6. | உல்த்தாள் | - பெண் தீர்க்கதரிசி (34:22) |
| 7. | அபி | - புத்திமானாகிய நிபுணன் (2:13) |
| 8. | ஓதேத் | - கர்த்தருடைய தீர்க்கதரிசி (28:9) |
| 9. | செமாயா | - தேவனுடைய மனுஷன் (11:2) |
| 10. | மனாசே | - வெண்கலச் சங்கிலி (33:11) |
| 11. | யெரொபெயாம் | - நேபாத்தின் குமாரன் (9:29) |
| 12. | எரேமியா | - புலம்பல் பாடியவன் (35:25) |
| 13. | தில்காத்மில்நேசர் | - அசீரியா ராஜா (28:20) |
| 14. | மிகாயா | - இம்லாவின் குமாரன் (18:7) |
| 15. | அதோனிராம்/ அதோராம் | - பகுதி விசாரிப்புக்காரன் (10:18) |
| 16. | யோசேபியாத் | - யோய்தாவின் பெண்ஜாதி (22:11). |
| 17. | அமத்சியாவின் தாய் | - யோவதானாள் (25:1) |
| 18. | யாகீன், போவாஸ் | - தூண்கள் (3:17) |
| 19. | பெராக்கா | - ஸ்தோத்திரம் (20:26) |
| 20. | செப்பத்தா | - பள்ளத்தாக்கு (14:10) |
| 21. | தர்ஷீஸ் | - கப்பல் (9:21) |
| 22. | கீதரோன் | - ஆறு (29:16) |
| 23. | மோரியா | - மலை (3:1) |
| 24. | பலிகளை பட்சித்தது | - அக்கினி (7:1) |
| 25. | ஒப்பீர் | - நானூற்று ஐம்பது தாலந்து பொன் (8:18) |

## போட்டி எண் : 15 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை**:கோகிலா; விஜி; சித்ரா; குளோரி; பியூலா; இவாஞ்சலின்; E.கலா; T.கலா; பிரபா; கனகவல்லி; ராணி பிளஸிங்; கிரிஜா; K.மகேஷ்வரி; எஸ்தர்; கிறிஸ்டி; J.சுமதி; டோரா; S.முத்துலெட்சுமி; மாது; S.பெனிட்டா; புஷ்பவல்லி; முத்துக்கோபால்; மஞ்சு; பிரேமலதா; தனபாக்கியம்; லீதியாள்; பிரின்ஸி ஜெனிபர்; மரகதம்; M.சுமதி; சாந்தி; பிரியா; ராதாமணி; |**ஆறுமுகநேரி**: பனிமலர்; ஜோதிமீனா; பாக்கியா; செல்வபிரியா; அன்ஸி ரத்னம்; ஜுலியட்; சரோஜா; வெண்ணிலா எஸ்தர்; திருமணிச்செல்வி; லோசினி சுதந்திரராஜ்; அனன்சி அருண்; சிவகாமி; மணிமேனகா; கனிஷ்டா மொர்ட்டன்; சுமதி; முத்துகுமார் அனிதா; G.B.ஜோஸ்; சுகிர்தா டைட்டஸ்; |**திருச்சி**: மரியா; மோனிக்கா சாமுவேல்; S.வினிதா; A.சாந்தி; வனத்துமேரி; ஜாஸ்மின் உஷாராணி; கிறிஸ்டி மகாலஷ்மி; மெர்ஸி சாமுவேல்; பிரதீபா பேட்டன்; ஸ்டான்லி; வசந்திமுத்து; R.சாந்தி; |**ஸ்ரீவில்லிபுத்தூர்**: மெசி; அபிராமி ஜாஷ்வா; வசந்தா; நெல்சன் செல்வராஜ்; அழகு நாச்சியார்; பாஞ்சாலி Tr; சிவரஞ்சனி; மாதவி; கிருபா; வெங்கடவள்ளி; |**கோயம்புத்தூர்**: பிரியா ராபின்சன்; K.ரெஜினாள்; கிறிஸ்டினா; மேரி டென்சில்; இந்திராணி; குளோரிபால்; ஜெனிபர்

## போட்டி எண் : 15 (சரியான விடை எழுதியவர்கள்...)

வின்சிலி; கிறிஸ்டினா அபிகாயில்; இளையரசன்; நித்யா பெர்க்மான்ஸ்; |**சேத்துப்பட்டு**: ஜெயராணி; மரகதம்; சுகந்தி பெனடிக்; செல்வமொழி; லட்சுமி காந்தா; மொர்சி; மாதரசி; ரெக்ஸி ஈஸ்வரன்; |**கடையநல்லூர்**: செல்வி இந்திராணி; R.தங்கராஜ்; ஸ்டெல்லா; சித்ரா; வினோலியா; ஆஷாதேவி; பெல்சியா; விக்டோரி குணா; P.தனம்; |**தேனி**: திரவியச்செல்வி; பாக்கியத்தாய்; தபீத்தாள் ராணி; G.புளோரியா; கிருபா; பூமணி ஜான்சி; ஜனனி; கார்த்திகேயாயினி; செண்பக புஷ்பா; **ஆண்டிபட்டி**: ராணி; தேவபாக்கியம்; ரோஸ்லின் சசிகலா; எஸ்தர் ராஜி; J.மேரி; அருணா தேவி; பூங்கொடி; |**ஆலங்குளம் (வி)** : R.மரியாள்; ரெஜினா சாரு; கிருபா கனி; சரண்யா; உமா ரோஸ்லின்; பிளாரன்ஸ்; |**மதுரை**: ஸ்வீட்டி கரோலின்; S.கணபதி; சித்ரா ராஜேந்திரன்; பரிமளா; கீர்த்தனா ரூபன்; P.சாந்தி; |**ராதாபுரம்**: ஜெய சாரோன்; பிரேமா அருள்தாள்; மரகதம்; செல்வபிரியா; நித்யா; மல்லிகா; |**தூத்துக்குடி**: சுந்தரிபாய்; ஹெப்சிபா; சுகந்தி ஜீசஸ்; ஜாய் செல்வி; பேபிகுமார்; ஆரோக்கிய சாமி; |**உடுமலைப்பேட்டை**: சந்தனா மதன்; சூசன்னாள்; ஜெயந்தி; புஷ்பா எட்வர்ட்; வசந்தி சாமிநாதன்; ஆக்னஸ்; |**திருநின்றவூர்**: எழலரசி; பிரேமா எடிசன்; தெரசா; ரோஸ்லின் மேரி; கேத்ரின்; |**எடப்பாடி**: T.அஞ்சலி; பிருந்தா; கவின் மூர்த்தி; சத்ய மூர்த்தி; ஜோசப் மேரி; | **மடத்துக்குளம்** : பரிமளா; ஸ்டெல்லா மேரி; ரூத்; ஜெனிட்டா ஜூலியட் மேரி; கிரேஸ்மேரி; | **கவரைப்பேட்டை**: பிளஸ்ஸி வசந்த்; இவாஞ்சலின்; தங்கம்; புவனா; சலோமி; |**கள்ளக்குறிச்சி**: பத்மாவதி; மகேஷ்வரி; தங்கமணி சாக்கோ; யெஷீரன் சாம் ஜெபக்கனி; **தருமபுரி**: நீனா பிரீத்தா; ஜோயா; ஜாஸ்மின் அ.மாதம்மாள்; ரூத்; **கரூர்**: ஜெயந்தி தாமஸ்; நந்தினி; வேனி; குட்டி; |**கோவில்பட்டி**: ரேச்சல்; செல்வின் பால்; மரியாள் ஜெயசீலி; |**நாகலாபுரம்**: ஷாலோம் இண்பெனட் சுஜந்த்; குளோரி அம்மாள்; லில்லி ஜெனட் தங்கம்; |**உக்கிரன்கோட்டை**: ருக்குமணி; ஜெயராஜ்; குழந்தை திரசம்மாள்; முத்துசெல்வி; |**சிட்டலப்பாக்கம்**: தாமரைச் செல்வி; ரெபேக்காள்; |**ஆம்பூர்**: ரூபி மனோகரன்; சுகன்யா வின்னி; கிரிஜா சத்தியா; |**இராமன்புதூர்**: அன்னம்மாள்; ஜான்சிராணி; லீதியாள்; |**சாத்தூர்**: சரோஜா; முத்துலெட்சுமி; விசித்ரா; |**சுரண்டை**: ஜெயமேரி; குளோரி ஞானம்; ஜீனா; |**திரேஸ்புரம்**: புளூசிமா; சில்வெஸ்டர்;|**குறிச்சான்பட்டி**: காஞ்சனா; ஸ்டெல்லா மேரி; |**கிருஷ்ணகிரி**: அன்பு ஜெயா; அனிதா ஷைலா; | **நெல்வாய்**; அருணா; தாட்சயாயிணி; |**இறச்சக்குளம்**: P.எஸ்தர்; ஜெஸ்மின்;|**புளியங்குடி**: ஜெயஞானம்; சுந்தரி; ஜெயமணி; |**வேப்பம்பட்டு**: ஜோஸ்மேரி பாளையம்; ஆர்த்தி; |**பெரியகுளம்**: நாகேஸ்வரி ராமர்; ஜேம்ஸ் மேரி; |**நாசரேத்**; மொர்சி; தாசன் மோசஸ்; | **மேல அனுப்பானடி**: ஜெயா; அனிதா; | **திருநெல்வேலி**: சுகுணா ரூபி; ரெஜினா அமல்ராஜ்; |**நாகப்பட்டினம்**: ஜான்வெஸ்லி பிரிஸ்ஸில்லா; வின்சென்ட்ராஜ்; கவிதா;|**நத்தைக்காடையூர்** : ஏசையன்; மோகனாம்பாள்; | **பரமத்திவேலூர்**: பாமா; திருச்செல்வி; | **திசையன்விளை**: செல்வபாக்கியம்; ஜாய்பெல்; |**மேலூர்**: செல்வநாயகம்; சரோஜினி; |**பாளையங்கோட்டை**: சாந்தகுமாரி; கலா பிரசாத்; |**கொக்கராயன்பேட்டை**: மாலதி; ஷாலினி; அக்சயா; |**மதுராந்தகம்** : அஞ்சுகம் பாஸ்கரன்; ரேணுகா; |**நாகமலை**: ஆனந்தி; விஜிலா; |**ஏர்வாடி**: பத்மாவதி; மரகதம்; |**கடாட்சபுரம்** : ரேவதி கில்பரட்; சுசிலா; |**அச்சரப்பாக்கம்**: விஷ்ணு பிரியா; திரேசா; |**அச்சிறுப்பாக்கம்**: A.செல்வகுமாரி; |**ஓசூர்**: ஜெமிந்தா; மார்கஸ் ரிச்சர்டு; ஐடா மனோகரன்; | **பாவூர்சத்திரம்**: ஜெசிலி; ஜூலி;|**அரசூர்**: ரோஸ்லின் சாந்தி; |**களக்காடு**: விமலா டேனியல்; | **மூக்குப்பீறி**: செல்லத்தாய் ராணி; |**வீரபாண்டியபட்டணம்**: தேவதாஸ்; |**விருதுநகர்**: சாமுவேல்; |**நொலம்பூர்**: ஹில்டா எலிசபெத்; |**கொங்கந்தான் பாறை**: சந்திரா ஆல்பர்ட்; |**அகஸ்தியர்பட்டி**: நிர்மலா; |**கடலையூர்**: எஸ்தர் ஆபிரகாம்; | **பெருங்குளம்**: A.பியூலா; |**கடம்பன்குளம்**: T.தமிழ்செல்வி |**சோமரசம் பேட்டை**: இவாஞ்சலின் லீதியாள்; |**குமரபுரம்**: கிறிஸ்டி ரிச்சர்டு; |**கல்லல்**: அபிஷாக்; |**தேவகோட்டை**: Dr.ஆஷா சுந்தரம்; |**வில்லிவாக்கம்**: ஜாஸ்மின் ரத்னா; |**அனகாபுத்தூர்**: மகேஷ்வரி; |**மேடவாக்கம்**: பியூலா ஜாய்ஸ் சுகந்தி; |**கூவத்தூர்**: எட்வர்ட்; | **காசிமேஜர்புரம்**: ரூத் செல்வராஜ்; |**வளசரவாக்கம்**: ஜெபசெல்விதனராஜ்; | **செம்பாக்கம்**: மரகதலீலா; |**கொட்டிவாக்கம்**: அமுதவல்லி; |**T.N.பாளையம்**: ஜெப்ரின் இம்மானுவேல்; | **பழனி**: Y.பிரிசில்லா; K.சாந்தி; |**திருப்பத்தூர்**: ரூத் தேவா; |**வெட்டூரணி மடம்**:M.S.அனிஷா; | **புதுஆயக்குடி**: லீலா; லட்சுமி; | **பசுவந்தனை**: கிருபா ஜெப்ரி; | **டெலானிபூர்**: கெட்சியாள்; |**நெய்யூர்**: ஷீலா ராபர்ட்|**கெட்டி**:

## போட்டி எண் : 15 (சரியான விடை எழுதியவர்கள்...)

S.சார்லஸ்; |**திருவாவூர்**: K.லாவண்யா; |**சிங்காநல்லூர்**:C.எப்ரோன்ஷா; |**குற்றாலம்**: வேளாங்கனி;| **பண்ணைவிளை**: M.கௌசல்யா | **சென்னை**: மெர்லின் ஹெலன்; | **சொக்கம்புதூர்**: P.நிர்மலா; |**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி; |**இளையரசனேந்தல்**; ஜோன் ஆப் ஆர்க்; |**திருக்கச்சூர்**: இம்மானுவேல்; | **தஞ்சாவூர்**: தேவகுமார்; | **ஆழ்வார்குறிச்சி**: ஹரிலீலா; |**கொத்திமங்கலம்**: உமா தேவ ஜோதி; **சேலம்**: ஜான்சிராணி; பெட்ரீஷியா டேவிட்; | **குரோம்பேட்டை**: கோமதிகுமார்; |**ஆவடி**: S. சந்திரா; | **உசிலம்பட்டி**: லீலாபாய்; |**வெள்ளக்கால்**: கலா சுரேஷ்; |**வடக்குகோணம்**: மரியநேசம்; |**ஆழ்வார் திருநகரி**: பனிமலர்; |**கம்பம்**: சாந்தசெல்வி; | **பெங்களூர்**: தேவபிரியா; |**இடைகால்**: செல்வி; |**அரியலூர்** : நியூஜிலின்; |**கீழரசூர்**: வசந்தி; |**அழகியபாண்டியபுரம்**: சுசிலா; |**சீரநாயக்கன்பாளையம்**: ரத்தினம்; |**பழையகாயல்** : எலிசபெத்; **கன்னியாகுமரி**: மார்கிரெட்ராணி; |**பள்ளிக்கரணை**: அழகுமுத்து; |**இலுப்பையூரணி**: வால்டர்சிங்; | **புதுக்கோட்டை**: லலிதா; |**வீராணம்**: எப்சிபா; |**கல்லுக்குழி**: W.டால்டன்; |**அய்யப்பாக்கம்**:அம்மணி; **கல்லிடைக்குறிச்சி**: செப்ரோனிக்கா.

---

## பரிபூரண ஜீவன் போட்டி எண்-16
## எஸ்றா, நெகேமியா (பொருத்துக)
### (இருப்பிடத்துடன் விடையை நேராக எடுத்து எழுதவும்)

| தகப்பன் | குமாரன் | தகப்பன் | குமாரன் |
|---|---|---|---|
| 1. மீகா | - சக்கூர் | 12. கொல்லோசே | - செகனியா |
| 2. யெசுவா | - யக்சியா | 13. ஆசாப் | - மெரேமோத் |
| 3. சிக்ரி | - யோகனான் | 14. இத்தோ | - மத்தனியா |
| 4. உரியா | - நொவதியா | 15. செராயா | - சல்லூம் |
| 5. சாதோக் | - செமாயா | 16. திக்கா | - யோவேல் |
| 6. அராயா | - எரோகாம் | 17. சாபா | - செருபாபேல் |
| 7. செயல்தியேல் | - சகரியா | 18. அகலியா | - அத்தூஸ் |
| 8. எலியாசிப் | - நெகேமியா | 19. பின்னூய் | - ஊசியேல் |
| 9. மல்கியா | - மெசுல்லாம் | 20.தெலாயா | - பஸ்கூர் |
| 10. ஆசகேல் | - யோசபாத் | 21. பெல்லியா | - யோனத்தான் |
| 11. ஊர் | - பாரூக் | 22.ஆராக் | - ரெப்பாயா |
| | | 23. ஆசாப்நெயா | - எஸ்றா |

---

குறிப்பு: விடையை புத்தகத்தில் எழுதி அனுப்பாமல் தனியாக பேப்பரில் எழுதி அனுப்பவும்

---

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.4.2026



### விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

## AGCM மண்டல தலைவர்கள் கூடுகை, பாண்டிச்சேரி








## சத்தீஸ்கர் மாநில மிஷனரி பயணமும் ஆலய பிரதிஷ்டையும்









## GLOBAL UNIVERSITY GRADUATION- KOLUTHUR, CHENNAI





Registered News Paper Regd. No. 8206 / 62




BOOK POST

If Undelivered please return to

**PARIPOORANA JEEVAN**

30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664